பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

கூடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஹூ ஆடி மீ 18 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ் பிறை 18 (02 - 08 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 146

தரமான
✶ சேட்டிங்
✶ சூட்டிங்
கண்கவர் ரெடிமேட் ஆடைகள்
சின்னஞ்சிறார்களின் சிற்றுடைகளுக்கு
கிறவுண்ஸ்
22 நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

இம்போட்டற் நைலெக்ஸ் சாறிவகைகள்
இந்தியன் பட்டுப் புடைவைகள்
கண்கவர் பிளவுஸ் பீஸ் வகைகள்
கிறவுண்ஸ்
22 , நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

கடமை நேரத்தில் வன்செயல்களால்

ஊனமுற்ற அரச ஊழியருக்கு 55 வயதுவரை சம்பளம்

முச்சந்தி முரளி

சில பேருக்கு சிலவேளைகளிலே அரசியலும் அலுக்கும் எண்டு புதிய பாட்டு ஒன்டு பாடலாம் போலே இருக்கு.... ! மல்லியே...? !

காயமுற்றவருக்கும் பல சலுகைகளை வழங்கப் பணிப்பு

– அலுவலகச் செய்தியாளர்: ஜோய் பூரணச்சந்திரன் –

யாழ்ப்பாணம், ஆக. 2

கடமை நேரத்தில் ஊனமுற்ற, காயமுற்ற அரசாங்க, கூட்டுத்தாபன, உள்ளூராட்சி ஊழியர்களுக்கும், இறந்தவர்களின் குடும்பங்களுக்கும் பலவித நிதிக் கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

இது சம்பந்தமாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் ஜூலை மாதம் 13ஆம் திகதியிட்டுப் புதிய 21/88ஆம் இலக்கச் சுற்று நிருபம் மூலம் பணிப்புரை விடுத்துள்ளார்.

வன்செயல் காரணமாகக் கடமை நேரத்தில் ஊனமுற்ற, காயமுற்ற அரசாங்க கூட்டுத்தாபன, உள்ளூராட்சி ஊழியர்கள், பணியாளர்களுக்கு உதவிப்படி அல்லது நஷ்டஈடு வழங்குவதற்கும், இறந்தவர்களில் தங்கி இருப்போருக்கு நிவாரணம் வழங்குவதற்குமான புதிய நடைமுறை ஒன்று தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் திரு. டி. பி. ஐ. பி. எஸ். சிறிவர்த்தன வெளியிட்டுள்ள 21/88 இலக்க சுற்று நிருபத்தில் இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

★ கடமையின் போது அரசாங்க உள்ளூராட்சி, கூட்டுத்தாபனப் பணியாளர்கள் வன்செயலால் காயமுற்றால்—

காயம் பெரியவை, இடைநிலைப் பெரியவை பெரியவை அல்லாத என்ற மூன்று பிரிவுகளுக்குட்படுத்தி அதன்படி காயத்திற்கான மருத்துவ உதவித் தொகை வழங்கப்படும்.

இதன்படி பெரிய காயங்களுக்குட்பட்டவர்களுக்கு உடன் நிவாரணமாக மூவாயிரம் ரூபாவும், மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படும்.

வேலைக்கு மீண்ட நாளிலிருந்து மாதாந்தக் (6 ஆம் பக்கம் பார்க்க)

பேச்சு நடப்பதாயின் மக்களுக்கு விவரம் அறிவிக்கப்பட வேண்டும்

ஆணையாளர் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஆக.2

பேச்சுவார்த்தைகள் எந்தக் கட்டத்தில் நடைபெற்றாலும் யார், யாருடன் எங்கே பேசுகிறார்கள் என்பது மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யவிருக்கும் வேளைகளில் எல்லாம் பேச்சுவார்த்தைகள் பற்றிய செய்திகள் வருவதுண்டு.

இவ்வாறு யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

இந்தியத் தரப்புக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நடந்து வருவதாக வெளிவந்த செய்திகள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டது. அப்போதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாயின், அதன் உண்மையான நிலையை மக்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ளக்கூடிய விதத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தக (6 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

2-8 1988
ஆடி – 18
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10-34 முதல் 12-04வரை
ராகுகாலம்:
03-04 முதல் 04-34வரை

இவை பாலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

உணவு முத்திரைகள் கிடைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக 2

உணவு முத்திரைகளை பொதுமக்கள் பெற்றுக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சகல உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் அந்தந்தப் பகுதிகளுக்கான உணவு முத்திரைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ் செயலக அதிகாரி ஒருவர் இந்தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை வரை செயலகம் இயங்க அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமையினால் செயலகம் தொடர்ந்து இயங்குவது தடைப்பட்டிருந்தது.

இதன் காரணமாக உணவு முத்திரை விநியோகம் தடைப்படலாம் என்று அஞ்சப்பட்டது.

எனினும் செயலக அதிகாரிகளும், ஊழியர்களும் மிகத் துரிதமாகப் பணி ஆற்றியதால் உணவு முத்திரை விநியோகம் சம்பந்தப்பட்ட அலுவல்கள் பூரணத்துவம் அடையும் நிலையில் உள்ளன. (ஒ – 5)

மர்மமான தீ விபத்து

கொழும்பு, ஆக 2

பாணந்துறை பொதுச் சந்தையில் மூப்பது சடைகள் கடந்த சனிக்கிழமை இரவு மர்மமான முறையில் தீப்பற்றி எரிந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ–எ)

வடக்கு, கிழக்கில் தேர்தல்: இவ்வாரத்தில் அரசு முடிவு

கொழும்பு, ஆக. 2

வடக்கு–கிழக்கு மாகாணசபைத் தேர்தலை எப்போது நடத்துவது என்பது பற்றி அரசு இவ்வாரம் தீர்மானிக்கும் என்று அரசு உயர் வட்டாரங்கள் தெரிவித்தன

புதுடில்லியில் இருந்து இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் கொழும்பு திரும்பி விட்டார்.

கண்டிக்குச் சென்றிருந்த ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்றுக் கொழும்பு திரும்பிவிட்டார்.

இருவரும் எந்த நேரமும் சந்திக்கலாம் என்றும்—

அதன் பின்னர், வடக்கு–கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான திகதியை அரசு நிர்ணயிக்கும் என்றும் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் சொன்னார் என்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதியைச் சந்திக்கும்போது, இலங்கை நிலைமை பற்றிய புது டில்லியின் நிலைப்பாட்டைத் திரு. டிக்ஸிற் தெரிவிக்கலாம் என்று கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ–எ)

நெருக்கடி காலத்தில்

தனியார் பஸ்களை சுவீகரிக்கப்போவதாக முகம்மது பயமுறுத்தல்!

கொழும்பு, ஆக 2

நெருக்கடி காலத்தில் தனியார் பஸ்களை சுவீகரித்து அரசு போக்குவரத்துக்கு விடும் என்று போக்குவரத்து அமைச்சர் எம். எச். முஹம்மது அறிவித்திருக்கிறார்.

கடந்த வெள்ளி, சனி தினங்களில் தனியார் பஸ்கள்போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவில்லை இதனால்தான் அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

பயமுறுத்தல் காரணமாகவே தாங்கள்சேவைகளை நடத்தவில்லைஎன்று தனியார் பஸ் உரிமையாளர்கள் அமைச்சருக்குத் தெரிவித்துள்ளனர்.

தனியார் பஸ் உரிமையாளர்களை நாளை புதன் கிழமை அமைச்சர் மாநாடு ஒன்றுக்கு அழைத்துள்ளார்.

யாழ் பல்கலைக்கழக 3 ஆம் வருட

மருத்துவ பீட மாணவரின் 'கிளினிக்கல்' பயிற்சியை ஆரம்பிக்க ஏற்பாடு?

யாழ்ப்பாணம். ஆக. 2

யாழ்ப்பாண பல்கலைக் கழக மருத்துவபீட மூன்றாம் வருட மாணவர்களுக்கான கிளினிக்கல் பயிற்சிகளை இம்மாதம் 15ஆம் திகதியில் இருந்து நடத்த முடியும்.

நேற்று யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் நடந்த மருத்துவபீடவிரிவுரையாளர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் மேற்கண்ட கருத்துத் தெரிவிக்கப்பட்டதாக அறியவந்தது.

மருத்துவ பீடத்துக்கான விரிவுரையாளர்கள் பற்றாக்குறையினால் கடந்த வருடம் அக்டோபர் மாதத்தின் பின் எதுவித விரிவுரைகளும் நடத்தப்படவில்லை.

விரிவுரைகளைத் தொடங்குவதற்கு ஆக்குறைந்தது ஐந்து பதிவாளர்களாவது தேவை என்ற நிலையில் தற்போது மருத்துவபீடம்உள்ளது.

ஆனால் ஐந்து விரிவுரையாளர்களுக்குமான வெற்றிடங்கள் விரைவில் நிரப்ப முடியும் என்று எதிர்பார்க்கின்றோம் மேலும் யாழ். போதனா வைத்தியசாலை (6 ஆம் பக்கம் பார்க்க)

வரலாறு குறித்து ஜே. ஆர்.

கொழும்பு, ஆக. 2

இலங்கையின் வரலாறு கிறிஸ்துவுக்கு முன் 6ஆம் நூற்றாண்டில் இருந்து எழுதப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஜெயவர்த்தனா தெரிவித்தார்

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்று ஆங்கிலக் கழகத்தின் 1[illegible]வது மாநாட்டை ஜனாதிபதி தொடக்கி வைத்தார்.

அப்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (ஒ–எ)

ஈரானின் புதிய ஏவுகணை

தரையில் இருந்து தரைக்குப் பாயும் ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாகப் பரீட்சித்திருப்பதாக ஈரான் நேற்று அறிவித்தது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணை நூறுமைல் தூரம் பாயக் கூடியது என்று ஈரான் தகவல்துறை அமைச்சர் அறிவித்தார்.

விநாயகன் யானைவடிவில் இருப்பது ஏன்?

புலவர் கீரன் விளக்கம்

விநாயகப் பெருமான் ஏன் யானை வடிவத்தில் இருக்கிறார்?

புலவர் கீரன் நேற்று இதற்கு விளக்கமளித்தார்.

புலவர் கீரன் சொன்னதாவது:

யானை மிகஉயர்வானது. யானைக்கும் ஓர் இயல்பு உண்டு. யாராவது யானைமீது ஏறி அமர்ந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்பட்டால்... ஆசைப்படுவதில் ஒன்றும் தப்பில்லை. யானைமேல் ஏறி உட்கார வேண்டும் என்று யார் ஆசைப்பட்டாலோ ஒரே ஒருவழிதான்உண்டு. என்ன வழி? யானை காலைப்பிடித்தால்தான் அதன் மீது ஏறி உட்காரலாம். இதைவிட்டால் வேறு வழியே கிடையாது.

வேறு வழியுண்டா? ஒரு யானையைக் கொண்டு வந்து இங்கு நிற்க வைத்து (6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு

ஆஸ்பத்திரிகளுக்கு மருந்து வகைகள் வழங்க செஞ்சிலுவைச்சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம். ஆக. 2

வடக்கு, கிழக்குப் பகுதி ஆஸ்பத்திரிகளில் நிலவிவரும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினர் மருந்து வகைகளை வழங்கவுள்ளனர்

இத்தகவலை யாழ். செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் டாக்டர் ஆர். தெய்வேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளில் தேவையோடு ஒப்பிடும் இடத்து பாவனைக்கு உள்ள மருந்துகள் குறைவாகும். இதனால் (6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கில் 5 வருடங்களில்

ஸ்ரீலங்கா படையினர் 978 பேர் உயிரிழப்பு!

1983ஜூலையில் இருந்து 1988 ஜனவரி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உயிரிழந்த ஸ்ரீலங்கா ஆயுதப்படையினரின் எண்ணிக்கை 978 என்று அரசு அறிவித்துள்ளது.

இரணுவத்தில் 646 பேரும் பொலீஸ் படையில் 268 பேரும் கடற்படையில் 37 பேரும் விமானப்படையில் 27 பேரும் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது (ஒ–எ)

ஜனாதிபதித் தேர்தலில் ஜே.ஆர்.போட்டியிடமாட்டார்!

அரசியல் வட்டாரங்களில் தகவல்

கொழும்பு, ஆக. 2

★ முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும்.

★ திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஐ.தே.க. வேட்பாளராக மூன்றாவது முறைபாகப் போட்டியிடமாட்டார்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா முன்கண்டவாறு தீர்மானித்து விட்டார் என்று அரசு உயர்மட்ட வட்டாரங்கள் தெரிவித்ததாக தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்தத் தகவல்கள் சரியாகவே இருக்கும் என அரசியல் அவதானிகளும் கருதுகின்றனர்.

நாட்டின் அரசியல் நிலைமையை நன்கு அலசி ஆராய்ந்த பின்னரே ஜனாதிபதி ஜெயவர்த்தனா இத்தீர்மானத்தை எடுத்திருக்கிறார் என்று அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு. ஜெயவர்த்தனாவின் இம்முடிவைத் தொடர்ந்து, ஐ.தே.க. சார்பில் போட்டியிடவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது பற்றி அரசியல் வட்டாரங்களில் பலவாறாக ஆருடம் கூறப்படுகிறது.

நவிண்டில் வீதியில் கண்ணிவெடிச் சம்பவம்

உடுப்பிட்டி நவிண்டில் வீதியில் கடந்த சனிக்கிழமை நண்பகல் சுமார் 12. 30 மணியளவில் கண்ணிவெடிச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இக் கண்ணிவெடிச் சம்பவத்தில் வீதியின் ஒரு பகுதி சேதமடைந்து பெரும்குழி ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

நேற்று சென்ற அமைதிப் படையினரை நோக்கியே கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதாகச் சொல்லப்பட்டது.

ஆட்சேதம் எதுவும் ஏற்பட்டதா என்பதுபற்றிய ஊர்ஜிதமான தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

இதேவேளை கண்ணிவெடிச் சம்பவம் இடம்பெற்ற பகுதியை அண்டிவாழும் பலர்விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்கக்கு

2½ பரப்புக் காணியும் வீடும் அத்துடன் C-90 கொண்டா மோட்டார் சைக்கிளும் உடுவில் வீதி மானிப்பாயில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சி. முருகதாசன், 'தண்டிகை வாசா' உடுவில் வீதி, மானிப்பாய். (5423)

கதவு நிலை விற்பனைக்கு

எங்களிடம் 9 அடி அகலம் 7 அடி உயரம் உடைய நிலையும், கதவும்; தீராந்தி. தகடும் (6 அடி) ஆகியவை விற்பனைக்குண்டு. தொடர்பு: சையிக்கிள் சென்ரர் (Cycle Centre) இல. 148, கே.கே. எஸ் ரோட், யாழ்ப்பாணம். (5505)

காணி விற்பனை

வீடு, வர்த்தக நிலையம் அமைக்கக்கூடிய 2½ பரப்புக்காணி (கிணற்றுடன்) நல்ல சுற்றுடலில் தட்டாதெருச் சந்தியில் (கே. கே. எஸ். ரோட்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: K. S. முத்து லிங்கம் (Royal) நவாலி தெற்கு, மானிப்பாய். (5501)

இறைச்சிக்கோழி விற்பனை

Broiler இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre C/O நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (சி 5625)

Prima Lohmann வெள்ளை, சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் சிவப்பு சேவல் குஞ்சுகள் Hy-Line வெள்ளை கறுப்புப் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன்முன் கூட்டியே பதிவு செய்யவும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர். (C5626)

Cull Birds முட்டை இட்டு இளைத்த இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தும் தரப்படும். Nallur Farm Centre, C/o Nallur Video Centre, 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (5068)

BAIRAHA FARM ஒருநாள் புறொயிலர் சேவல், பேடு குஞ்சுகள் 4-8-1988 அன்று விநியோகிக்கப்படும். முன் கூட்டிப் பதிவு செய்யவும். பாம் ஹவுஸ், ரோட் ரோட், மல்லாகம். (5147)

GOLDI Sausages எல்லாவகையான Sausages மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரிகளுக்கு கழிவு தரப்படும். Nallur Farm Centre C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். [C.5624]

வீடுவளவு விற்பனை

பிரதான வீதியோரமாக, மட்டுவில் நடுபூனகரியில் (ஆசாரியகுறிச்சி) சிறிய வீடும் (மலசலகூடத்துடன்) 5 பரப்பு மேட்டுக்காணியும், இதனுடன் சேர்ந்த 12½ பரப்பு வயல் காணியும் உடன் விற்பனைக்குண்டு. இத்துடன் மின்சார ஒட்டும் 'ருன்ஸ் போமர்' சாவகச்சேரியில் விற்பனைக்குண்டு. தொடர்பு: வே. துரைசிங்கம் (பாக்கியம்) கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. (5504)

கட்டிடப் பொருட்கள் விற்பனை

வீடு கட்டுவதற்கு உரிய யன்னல், நிலைகள், கதவுகள், கூரைக்குரிய சகல மரங்களும் நல்லநிலையில் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: J. T. வின்சிலோ, C/o Dr. செல்வச்சந்திரன், மானிப்பாய் ரோட், உடுவில். (5511)

தேவை

ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் உடன் தேவை. தகுதியுடையோர் கீழ்கண்டவிலாசத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். 222/4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (5426)

சிங்கப்பூரில் பணிப்பெண்கள் தேவை

ஆங்கிலம் ஓரளவுக்குத் தெரிந்த வயது 20-35 வரையுள்ள பணிப்பெண்கள் தேவை. சம்பளம் மாதம் 3000/- தங்குமிடம், உணவு யாவும் இலவசம். இரண்டு வருட ஒப்பந்தம் நாலு வருடம் நீடிக்கலாம். பாஸ்போட் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். எஸ். யோகரட்ணம், 96, ஆடியபாதம் வீதி, கோணியடி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி. (5518)

T.V– டெக் மெக்கானிக் தேவை

T v. டெக் திருத்தக் கூடிய நன்கு அனுபவம் உள்ள 'மெக்கானிக்' தேவை. திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும். தொடர்பு: லக்ஷ்மன் வீடியோ கிளப், வங்களாவடிச் சந்தி, வேலணை. (5514)

மனைகள் தேவை

பலம்பொருள் கூட்டுத்தாபன முன்னாள் ஊழியரும் பிரான்சில் நிரந்தர வேலை செய்பவரும் 33 வயது அச்சுவினி நட்சத்திரம் 12ல் செவ்வாய் உடையவருமான தமது மகனுக்கு மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர். சீதனம் எதிர்பார்க்கப்படும். பிரான்சில் இருப்பவர் விரும்பப்படுவர். சாதகம் மற்றும் விபரங்களுடன் திருமதி கு. மல்லிகா தேவி 13/3 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (5517)

1. யாழ்/இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த, 28 வயதுடைய, செவ்வாய்க் குற்றமுள்ள, முதிசமுள்ள வெளிநாட்டு வியபாரம் செய்யும் படித்த மணமகனுக்குப் பெண் தேவை.

. இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த மாதம் 5 ஆயிரம் நிரந்தர வருமானமுள்ள, சொந்த வீடு வளவுள்ள, கண்பார்வை குறைந்த, மணமகனுக்கு (வயது 34) பெண் தேவை. சீதனம் கவனிக்கப்படமாட்டா. தொடர்பு: 'ABCDE' விவாகப் பொருத்தமார் 328, நாவலர் ரோட், ஆனைப்பந்தி. (5512)

WANTED

Vocational Training Instructor for Carpentry Part time/Full time. Call personally. United Engineers, Technical Training Institute for Rehabilitation. C/o Sai Saw Mills, 91, Kamanathan Road, Kaladdy, Jaffna. (5502)

கொள்ளை!

வடமராட்சி ஆக 2 பொலிகண்டி பளவளவு என்னும் இடத்தைச் சேர்ந்த ஒருவரது வீட்டில் ரீவி டெக், நகைகள் ரொக்கப் பணம் போன்றவை கொள்ளை அடிக்கப்பட்டன. (இ–160)

தவறிவிட்டது

எனது அடையாள அட்டையும் ஒய்வூதியக் காரட்டும் யாழ்ப்பாணத்திற்கும் சித்தன் கேணிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். திருமதி மாக்கிறேற் நேசம் தேவிவாசகம் 4ம் கட்டை ஆனைக்கோட்டை. (5427)

அடையாள அட்டையைக் காணவில்லை

சியாமளாதேவி நடராசா 285, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் ஆகிய எனது அடையாள அட்டை இல: 526040198 V கோப்பாய், யாழ்ப்பாணம் மிலிவானில் ஆரியகுளம் சந்தியில் - முடிச்சு மாறிகளால் அபகரிக்கப்பட்டுள்ளது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேல் விலாசத்தில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படையுங்கள். நன்றி. (5508)

சோதிட மாந்திரீக நிபுணர்

நினைத்த காரியம், ஜாதகபலன், விவாகப் பொருத்தம், எண்சோதிடம், தொழில்விருத்தி, மங்கள மணவாழ்வு, மனையில் இலக்குமி கடாட்சம், நோய்பிணி தீரல், சத்துருஜெயம், முதலான மாந்திரீக விடயங்களுக்கும் நாடுங்கள் 'சக்தி சரவணா' (அரச அங்கீகாரம் பெற்ற சோதிடரும், மட்டக்களப்பு பாரம்பரிய – பரம்பரை மாந்திரீக நிபுணரும்) 210, கஸ்தூரியார் வீதி. (யாழ்/இந்துக்கல்லூரி மைதானத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். (C/5962)

கல்வி

வகுப்புகள்

O/L Day Classes வடமாகாணத்தில் நிபுணத்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் நடாத்தப்படுகின்றது: விஞ்ஞானம் – R. செல்வவடிவேல், கணிதம் –T. தயாபரன்; சமூகக்கல்வி, சரித்தரம்– K. S. முத்துலிங்கம், ஆங்கிலம்– தெய்வர்; தமிழ் – பொன். செல்வராசா, Royal Institute, Manipay. (5053)

அறைகள் வாடகைக்கு

யாழ்/புளியரிதஸ்ரேஷன் சந்திக்கு அருகாமையில், இல 390 ஆஸ்பத்திரி வீதியில், தனி வீட்டில் அறைகள் வாடகைக்கு விடப்படும். மாணவர்கள் விரும்பத் தக்கது. தொடர்பு: 390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (5515)

லிலியா வீடியோ ஒடியோ கிளப்

இல. 2 நவீன சந்தை மேல்மாடி நிருநெல்வேலியில் புதிதாக ஆரம்பித்து இருக்கும் எமது லிலியா வீடியோ, ஒடியோ ஸ்தாபனத்திற்கு வாடிக்கையாளர்களின் ஆதரவை நாடுகிறோம். அத்துடன் ஒடியோ, வீடியோ, சாதனங்கள் திருத்தியும் கொடுக்கப்படும். லிலியா வீடியோ ஒடியோ, No 2. நவீன சந்தை மேல்மாடி, நிருநெல்வேலி. (5393)

நெடுந்தீவில் பஹாய் கருத்தரங்கு

நெடுந்தீவில் உள்ள பஹாய் விசுவாசிகளை எதிர்வரும் 27 ஆம் திகதி நேரடியாகச்சந்தித்து கருத்தரங்கொன்றை நடத்துவது என யாழ்ப்பாண மாவட்ட பஹாய் இயக்கம் தீர்மானித்துள்ளது.

நெல்லியடியில் உள்ள சுவர்ணராய இல்லத்தில் நடைபெற்ற உள்ளூர் ஆத்மீக சபைக் கூட்டத்தில், இவ்வாறு முடிவு செய்யப்பட்டது. (இ 90

பிரத்தியேக வகுப்புகள்

A/L

கணக்கியல்

1989 - 90

சனி – ஞாயிறு

4.00 p.m.

ஸ்ரீகாந்தன்

ROYAL INSTITUTE

MANIPAY.

(C 5998)

A/L

கணக்கியல்

1989 - 90

சனி – ஞாயிறு

1.00 p.m.

ஸ்ரீ அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்

ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(மக்கள் வங்கி அருகு)

(C 5997)

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலம் பிரதி செய்ய விரும்புகிறீர்களா?

FREE 8X10" ENLARGEMENT

பிரதி 4-00

கொழும்பு ஸ்ரூடியோ

யாழ்ப்பாணம்

காணவில்லை

மாரிமுத்து ஜெயமலர்

வயது-16 உயரம்4'6'' வெள்ளைநிறம். 11-7-88 முதல்காணவில்லை. தயவுசெய்து தகவல் தெரிந்தவர்கள் என் மகளை என்னிடம் ஒப்படைக்க ஒழுங்கு செய்யுங்கள். என் உயிரே என் மகள் தான். சன்மானம் வழங்கப்படும். நன்றி

தகவல்:

மா. முத்தம்மா, பிள்ளையார் கோவில்-ஒட்டிசுட்டான், முத்தையன் கட்டு வலது கரை, அல்லது செல்லத்துரை, அரசடி, சந்தை மேல்மாடி, நிருநெல்வேலி. (5552)

இரண்டு மாத நிவாரணத்தை அரசஅதிபர் வழங்கினர்

புனர்வாழ்வு அமைச்சின் சமீபத்திய சுற்றறிக்கையின்படி விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை தன் தற்றுணிபின்படி தளர்த்தி சகலருக்கும் இரண்டு மாத நிவாரணத்தை முல்லைத்தீவு அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் வழங்கினர்.

புதுக்குடியிருப்பு மக்கள் இராணுவ நடவடிக்கையினால் உளரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நொந்து போயிருக்கும் இந்நிலையில் நிதிப்பற்றாக்குறையைக் காரணம் காட்டி அரசுநிவாரணம் வழங்குவதில் கட்டுப்பாடுகளை விதிப்பது நியாயமல்ல என முல்லைத்தீவு மத்தியபிரசைகள் குழுபிரதிநிதி சேதுபதி புதுக்குடியிருப்பு மேற்கு பிரசைகள் குழுத் தலைவர் க. தர்மலிங்கம், உபதலைவர் சி. அருணாசலம், செயலாளர் சா. சண்முகநாதன் ஆகியோர் கொண்ட தூதுக்குழுவினர் அரச அதிபரிடம் முறையிட்டனர்.

இதனையடுத்தே புனர்வாழ்வு அமைச்சின் சுற்றறிக்கையின்படி கட்டுப்பாடுகளை தன் தற்றுணிபின் படி தளர்த்தி சகலருக்கும் இரண்டுமாத நிவாரணத்தை அரச அதிபர் திரு. க. பொன்னம்பலம் வழங்கினர். (இ126)

இரு நாட்களில் 14 பேர் மட்டும் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஆக 1 முழுநேர ஊரடங்கு அமுலில் இருந்த இரண்டு நாட்களிலும் யாழ். ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் 14 பேர் மட்டுமே சிகிச்சை பெற்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்களும், விபத்துக்கு இலக்கானவர்களுமே இவ்வாறு சிகிச்சைபெற ஆஸ்பத்திரியில சேர்க்கப்பட்டவர்களாவர்.

அவசர நோயாளர்களை இந்திய அமைதிப் படையினர் விசேட அனுமதியுடன் ஆஸ்பத்திரிக்குச் செல்ல பாஸ் வழங்கினர்.

சில கிராமங்களிலிருந்து படையினர் தமது வாகனங்களிலேயே நோயாளர்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு வந்து சேர்த்தனர். (ஒ–10

1. DUBAI

ஓடருக்கு பாஸ்போட் தந்தவர்கள் எல்லோரும் எதிர்வரும் 20, 21 ஆந் திகதிகளில் சந்திக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

2. KUWAIT

ஓடருக்கு பாஸ்போட் தந்தவர்கள் எல்லோரும் எதிர்வரும் 9, 10 ஆந் திகதிகளில் சந்திக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

வேலைவாய்ப்புகள்

3. KUWAIT

(1) ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (ஆண்கள்) — 35 KD
(2) ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் (பெண்கள்) — 35 KD
(3) மேசன் — 50 KD
(4) தச்சவேலையாள் — 50 KD
(5) எலெக்ரீசியன்ஸ் — 60 KD
(6) வாகன–மெக்கானிக் — 60 KD
(7) பிளம்பர்ஸ் — 60 KD
(8) வாகன–எலெக்ரீசியன்ஸ் — 60 KD
(9) சாரதிகள் — 60 KD

இரண்டு வருட ஒப்பந்தம், இலவச உணவு, வைத்திய இருப்பிட வசதிகள்.

சவூதி அரேபியா

(1) வீதி துப்புரவாக்கிகள் — 300SR -100SR

3 வருட ஒப்பந்தம்

இரண்டு கிழமையுள் பயண ஒழுங்குகள் செய்யப்படும்:

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

A. தவச்செல்வம் B. Sc. (Hons)

நெல்லியான் வீதி, சுழிபுரம்.

(C–6002)

வேலை வாய்ப்பு

1. DUBAI - டுபாய்

Factory Workers

தொழிற்சாலை வேலையாட்கள்

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் கவர்ச்சியான சம்பளம். விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

2. சவூதி - Farm Workers

பாம் வேலையாட்கள்

* OPEN VISA – ஓப்பின் விசா
* 25 வயதுக்கு மேற்பட்டவர்கள்
* சாப்பாட்டுடன் நல்ல சம்பளம்

3. லெபனான் - Shoe Factory Helpers

சப்பாத்து தொழிற்சாலை உதவியாளர்

குறைந்த செலவில் உடன் அனுப்பி வைக்கப்படும்.

4. குவைத் - National Cleaning Co.

கிளீனேர்ஸ்:

நல்ல சம்பளத்துடன் சாப்பாடும்.

பாஸ்போட் 6 படங்களுடன் காலை 10 மணிக்கு முன் சந்திக்கவும்.

குவைற் பாஸ்போட் தந்தவர்களும் நேரில் சந்திக்கவும்.

சிவா மாஸ்டர்

தொழில் ஆலோசகர்

ஏழாலை.

(C/6001)

தேவை

எமது கல்வி நிலையத்தி கு லிகிதர் தேவை. ஆண், பெண் இருபாலாரும் ஏற்றுக் கொள்ளப்படுவர். தகுதியானவர்கள் 3-8-88 புதன் நண்பகல் 12 மணிக்கிடையில் நேரில் வரவும். (அச்சுவேலியில் வசிப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்)

குகன் இன்ஸ்ரிரியூட்

அச்சுவேலி.

(5575)

1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வி சிவமலர் நடேசபிள்ளை

தாய் மடியில் 10 – 2 – 71 ஆண்டவன் காலடியில் 2 - 8 – 87

அன்பின் தெய்வமகளே, செல்வத்திரு சிவமலரே, நீர் மறைந்து ஆண்டொன்று போனாலும், ஆறாது எங்கள் மனம் உன்நினைந்து என்றும் கலையிழந்து வாடுதம்மா! உமது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்

அம்மா, ஐயா, சகோதர, சகோதரி, பெருமக்கள்.

11-ம் வட்டாரம், புங்குடுதீவு. (5573)

14 ஆம் நினைவு நாள்

பிறப்பு 1963-09-25

இறப்பு 1988 07- 18

தம்பு விமலேஸ்வரன் (விமல்) (ஈஸ்வரன்)

தம்பிராய், பூநகரி, தம்பு பொன்னம்மா ஆகியோரின் மகன் விமலேஸ்வரன் 18-07-88 இல் அகாலமரணமானார். இவர் பூநகரி தம்பிராய் அ. த. க. பாடசாலை, மட்டுவில் மகா வித்தியாலயம், வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவனும், யாழ். பல்கலைக்கழக வணிக பீட மாணவனுமாவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 19-07-88 இல் பூநகரியில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்,

(C/6005)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்

பிரச்சினை தீரும்

10 ரூபா வீதம் கொள்வனவு செய்து விநியோகிக்கத்திட்டம்

யாழ்ப்பாணம். ஆக 2

பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களின் சந்தைப்படுத்தல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய திட்டம் ஒன்று இம்மாத முதல் வாரத்தில் நடைமுறைக்கு வரவுள்ளது.

யாழ் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இத்திட்டம் பற்றி ஆராயப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றஇக்கூட்டத்தில் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர், கமத்தொழில் திணைக்கள உதவி ஆணையாளர், கூட்டுறவுச்சங்க பொதுமுகாமை செய்து கொண்ட பின் ஏரிசடற்றொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னர் கடற்தொழிலுக்குப் போகவும் இவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

இந்நிலையில் திடீரென சென்றி அகற்றப்பட்ட தனால் மக்கள் சிரமம் இன்றி தம் தொழிலைச் செய்யக்கூடியதாக உள்ளது. (இ – 126)

புடையவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஆகக் குறைந்த உத்தரவாத விலையான 10 ரூபாய்படி உற்பத்தியாளர்களிடம் சந்தைப்படுத்தும் திணைக்களம், கூட்டுறவுச்சங்க பொதுமொத்த விற்பனை நிலையம், மாக்பெட் சங்மனை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் என்பன வாங்கும்.

வாங்கி யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கும் என்று தெரிய வருகிறது. (இ-5)

இலவச மருத்துவ முகாமுக்கு மருந்து அன்பளிப்பு

சுன்னாகம் ஆக 2

குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஏற்பாட்டில் சன்மார்க்க சபை மண்டபத்தில் கடந்த பல மாதங்களாக நடைபெற்று வரும் இலவச மருத்துவ முகாமுக்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் (பிரிட்டன்)ஒருதொகுதிமருந்து வகைகளை அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் வேண்டுகோளை ஏற்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் வடபகுதி நிவாரண அதிகாரி திருமதி. சர்வமங்களம் கைலாசபதியின் பணிப்பிலேயே இம் மருந்து வகைகள் வழங்கப்பட்டன. (இ-27)

ஈராணுவ 'சென்றி' வாபஸ்

மீனவர் தொழில் வழமை நிலையில்

யாழ்ப்பாணம். ஆக 2

தொண்டமானறு பெரிய கடற்கரையில் போடப்பட்டிருந்த இராணுவ சென்றி அகற்றப்பட்டு விட்டது.

இந்தச் சென்றி இரு மாதங்களுக்கு முன்னர் போடப்பட்டது. இந்த சென்றி காரணமாகக் கடற்றொழிலாளர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இவர்கள் பதிவேடு ஒன்றில் பெயரைப்பதிவு

கோவில் திருத்தப்படவில்லை; உற்சவமும் இல்லை

கோப்பாய், ஆக 2

கடந்த வருட அசம்பாவிதங்களின்போது சேதமடைந்த கோப்பாய் வடக்கு வராம்பற்றை இலுப்பையடி பிள்ளையார் கோவில் திருத்தப்படாததால் வருடாந்த உற்சவம் நடைபெறவில்லை

பூசைகள் மாத்திரமே நடைபெற்று வருகின்றன.

இப்பகுதி மக்கள் இக் கோயிலின் சேத விவரங்களை சம்மந்தப்பட்டவர்களிடம் சமர்ப்பித்து ஒருவித பலனும் கிடைக்கவில்லையாம். (இ- 72)

மருந்துத்தட்டுப்பாடு

ஒட்டுசுட்டான் ஆக -2

ஒட்டுசுட்டான் அரசினர் மத்திய மருத்துவமனையில் மருந்து வகைகளுக்குப் தட்டுப்பாடு நிலவுகிறது. (இ 113))

கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களில் சிலர் விடுதலைப் புலிகளால் கைது

யாழ்ப்பாணம் ஆகஸ்ட் 2

தமிழீழ விடுதலைப் புலிகள் எனக்கூறி கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட சிலர் அண்மையில் வடமராட்சியில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். இவர்களிடமிருந்து போலித் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சடுமையாக எச்சரிக்கப்பட்டு மனிதாபிமான முறையில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த பத்திரிகைக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலகட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளைச்சம்வங்களில் ஈடுபட்டு வந்த சில நபர்கள், மக்களின் இரகசிய தகவல்களை அடுத்து எம்மால் சைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர்.

இவர்கள் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த மானுங்கனை, உடுப்பிட்டி, கற்கோவளம், சமரபாகு ஆகிய பகுதிகளில் உள்ள பல வீடுகளில் நகைகள் பணம், தொலைக்காட்சிப்பெட்டி, டெக், ரேப்றெக் கோடர் என்பனவற்றை கொள்ளையிட்டமை கண்டு பிடிக்கப்பட்டது,

ஆனால் இந்தப் பொருள்கள் அனைத்தையும் தாம் இந்தியா கொண்டு சென்று விற்று விட்டதாக அவர்கள் விசாரணையில் தெரிவித்தனர்.

இந்த விசாரணைகள் மக்கள் முன்னிலையிலேயே மேற்கொள்ளப்பட்டதுடன் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டும் உள்ளன.

உடுப்பிட்டியைச் சேர்ந்த இவர்களது பெயர் விபரம் வருமாறு:-

1. திரவியம் தமிழ்ச்செல்வன் (வயது23) வீரபத்திரகோவிலடி, 2. குழந்தையன் ராசன் (வயது 27) நாவலடி, 3.செல்லக்கண்டு திருக்கேதீஸ்வரன் (வயது 28) பண்டகை, 4. குமாரசாமி குலசேகரம் (வயது 40) மாத்தனை, 5. சிவகுரு கிருஷ்ணகுமார் (வயது 17) வீரபத்திரகோவிலடி.

இவர்களில் ஒருவர் போராளி இயக்கம் ஒன்றிலிருந்து விலகியவர். மற்றொருவர் மாற்று இயக்கம் ஒன்றைச் சேர்ந்தவர்

இவர்கள் அனைவரும் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கப்பட்டனர்.

ஆனால் திரவியம் தமிழ்ச்செல்வன் என்பவர் மட்டும் எமது பாதுகாப்பிலிருக்கும்போது தப்பிஓடி இந்திய இராணுவ முகாமில் சரணடைந்து விட்டார்—

இந்தத் தகவல்கள் பிரஸ்தாப பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மேலும் இப்படியான சமூக விரோதிகளை எச்சரிப்பதுடன். அவர்களை இனம் காட்டும் படியும் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-9)

அனைத்துத் தமிழ் பகுதிகளையும் இணைத்துச் செயற்படும் சங்கம்

மினிபஸ் சேவைச் சங்கம் பற்றி அதன் தலைவர்

யாழ்ப்பாணம், ஆக.2

தமிழ்ப் பகுதிகளில் தமிழ் மக்கள் நலன் கருதி செயல்படுவதற்கென எத்தனையோ ஸ்தாபனங்கள் இயங்குகின்றன. ஆனால்'வடபிரதேச மினிபஸ் சேவைச்' சங்கங்களின் சமாசம் என்ற எமது ஸ்தாபனம்தான் அனைத்துத் தமிழ்ப் பகுதிகளையும் இணைத்துச் செயல்படும் ஒரே ஸ்தாபனமாக விளங்குகிறது.

தென்மராட்சிப் பகுதியில் சாவச்சேரி – பளை பாதையில் சேவையாற்றும் மினிபஸ் சேவையாளர்களின் பொதுக்கூட்டம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்தில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக்கலந்து கொண்டு உரையாற்றிய வடபிரதேச மினிபஸ் சேவை சங்கங்களின் சமாஜத் தலைவர் திரு. பொன். மதிமுகராசா மேற்கண்டவாறு கூறினார்.

பளை - சாவச்சேரி பஞ்சாயத்துச் சபைத் தலைவர் திரு. த. நாகலிங்கம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

திரு. பொன். மதிமுகராசா மேலும் பேசுகையில், இப்போதுதான் மாகாண சுயாட்சிபற்றி இலங்கை அரசியலில் பேசப்படுகிறது. ஆனால் எமது சமாஜத்தின் கீழ் உள்ள ஒவ்வோர் பஞ்சாயத்துச் சபையும் 'சுயாட்சி' பெற்றனவாக நீண்டகாலமாகச் செயல்படுகின்றன.

சிறந்த சாரதி, சிறந்த நடத்துநர், சிறந்த பஸ் உரிமையாளர் ஆகியோருக்கு பரிசு வழங்கவுள்ளோம் இது மாதா மாதம் வழங்கப்படும்.

இப்படி அவர் கூறினார்.

வடபிரதேச மினிபஸ் சேவை சங்கங்களின் சமாச நேரக்கணிப்பாளர்களின் உயர் பரிசோதகர் திரு. எஸ். சிவநேசனும்கூட்டத்திலலந்து கொண்டு உரையாற்றினார். (இ)

மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பூரண அறிவு பெறவேண்டும்

"இன்றைய மாணவர்களே எதிர்காலத்தில் இந் நாட்டை ஆளப் போகும் தலைவர்கள். எனவே மாணவர்கள் பல்வேறு துறைகளிலும் பூரண அறிவைப்பெற்று உயர்வடையவேண்டும்"

அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை பருத்தித்துறை, ஆக 2

பருத்தித்துறை கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் மீண்டும் பருத்தித்துறை பழைய நகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் நடைபெற்ற இராணுவக் கெடுபிடியினால் இக் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையம் புலோலியில் வடமராட்சி கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு [illegible] குறிப்பிடத்தக்கது. (இ-118)

அடையாளம் காணப்பட்டனர்

வாகரையில் அண்மையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து இந்திய அமைதிகாக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தால் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட நபர்கள் வாழைச்சேனை வாசிகளான பாக்கியராஜா, சாயராஜா, கவிராஜா என அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதே சமயம் கொக்கட்டிச்சோலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இந்திய படையினருக்கு மிடையில் அண்மையில் இடம் பெற்ற மோதலில் கொல்லப்பட்ட நபர்கள் மூவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (இ-21)

சமயக்குரவர் குருபூசை பாடசாலைகளில் கட்டாயம் கொண்டாடப்படவேண்டும்

பண்டத்தரிப்பு, ஆக. 2

பாடசாலைகளில் சமயக் குரவர் குருபூசைகள் கடடாயம் கொண்டாடப்பட வேண்டும். பொய், கொள்ளை, கொலை, களவு, உயிர் வதை, பிறர்பொருள் மீது ஆசை, பகை, மது அருந்துதல், சூதுவாது மறைந்து சத்தியம், அன்பு, தானம், தருமம் நட்பு, சிவகாருண்யம் எமது வாழ்வில் மிளிர வேண்டும். இதற்காகச் சமயக்குரவர் நால்வரதும், ஏனைய நாயன்மார்கள் மற்றும் சைவப் பெரியார்களின் தினங்களும் பாடசாலைகளில் கொண்டாடப்பட வேண்டும்.

மாதகல் சென்யோசேப் மகா வித்தியாலயத்தில் அதன் உப – அதிபர் அருள் சுப்பிரமணியம் அவர்கள் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையின் போது மேற்கண்டவாறு கூறினார்.

அதிபர் திரு. அ. தம்பிப்பிள்ளை தலைமையில் குருபூசை நடத்தப்பட்டது.

தொடர்ந்து பேசுகையில் அருள் சுப்பிரமணியம் கூறியதாவது:-

குருபூசைகள் கொண்டாடுவதன் மூலம் மாணவர் மனதில் அவர்கள் வாழ்ந்த புனிதவாழ்வும், செய்த அற்புதங்களும் அவற்றின் வாழ்க்கைத் தத்துவங்களும் புரியும்.

அதன்பயனாக மாணவர்கள் தம்மை அறியாமலே சைவநெறிமுறை வாழ்வைக் கைக்கொள்வர்.

சைவநெறி வாழ்வில் பதற்றம், சுயநலம் இல்லை. மாதா, பிதா, குரு, இறைபக்தி தழைத்தோங்கும் இன்ன நினைவுச் சிந்தனை, பிள்ளைவளைச் சிந்திக்க வைக்கும்.

நாம் ஒவ்வொருவரும் எமது நடவடிக்கைகளின் பிரதிபலிப்புகள் பற்றிச் சிந்தித்துச் செயலாற்றும் பழக்கத்தை ஏற்படுத்தினால் எமது வாழ்வு செம்மையானதாக அனைவரும் விரும்பும் ஒன்று அமையும்.

இப்படி அவர் கூறினார்.

சங்கீதபூஷணம் எஸ். வி. பரமலிங்கம் அவர்கள் கந்தரர் கலி இழக்கக் காரணம் என்ன? என்ற தலைப்பில், இசைச் சொற்பொழிவு ஆற்றினார். (இ-120)

விபுலானந்தர் இசைக்கல்லூரி தரம் உயர்த்தப்படவேண்டும்

அமைச்சருக்கு மகஜர்

யாழ்ப்பாணம் ஆக 2

மட்டக்களப்பு விபுலானந்தர் இசைக் கல்லூரியின் தற்போதைய நிலை திருப்திகரமானதல்ல. இதன் தரம் உயர்த்தப்படவேண்டும். இக்கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய மாணவர்களுக்கு வழங்கப்படும் தகமைச் சான்றிதழை வைத்து ஆசிரியத்தொழிலையோ அல்லது வேறு எந்தத் தொழிலையோ பெறுவது சிரமமானதாகும்.

இக்கல்லூரியை நிர்வகிக்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சுக்கு இலங்கை தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. த. மகாசிவம் அனுப்பிய மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்லூரியின் தரத்தை உயர்த்துவதற்கு பின் வரும் நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்று மகஜரில் ஆலோசனை கூறப்பட்டிருக்கிறது.

பயிற்றப்பட்ட ஆசிரியரின் சம்பளமே அதிபருக்கு வழங்கப்படுகின்றது. இதைமாற்றி கல்வி நிர்வாகச் சேவை தரம் ஒன்றிற்கான சம்பளம் வழங்கப்பட வேண்டும்

இங்கு சேவையாற்றும் விரிவுரையாளர்கள் 'சங்கீத பூஷண' பட்டத்தை அல்லது இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் டிப்புளோமா பட்டத்தை பெற்றவர்களாக இருக்கின்றார்கள். இவர்களுக்கு குறைந்தது பட்டதாரி ஆசிரியர் சம்பள அடிப்படையிலாவது சம்பளம் வழங்கப்பட வேண்டும்.

இக் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களாக இருந்தால் நல்லது.

இக்கோரிக்கைகள் நிறைவேற்றப் படாவிட்டால் இக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறும் மாணவர்களின் எதிர்காலம் பெரிய கேள்விக் குறியாக அமையும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைதியாக நடந்த பரீட்சை

மட்டக்களப்பு, ஆக.2

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஜீ. சி. ஈ.(உயர் தர) பரீட்சைமிக அமைதியான முறையில் நடைபெறுகிறது.

ஸ்ரீலங்கா பொலீஸ், இந்திய அமைதிப்படை உட்பட எந்தவொரு படையினரின் பாதுகாப்பு [illegible] வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-21)

மீண்டும் பழைய இடத்தில்

வீதி மோசம் விவசாயிகள் பாதிப்பு

கோப்பாய், ஆக 2

நீர்வேலி சந்தியிலிருந்து ஊரெழுவுக்கு செல்லும் பாதை ஒரே குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

நீர்வேலியிலிருந்து சுன்னாகம் சந்தைக்கு விளைபொருள்களை எடுத்துச் செல்லும் விவசாயிகள் பெரிதும் கஷ்டமுறுகின்றனர். (இ-72)

உ
சிவமயம்

முதலாவது
பிறந்த நாள் வாழ்த்து

செல்வன் கி. சுரேந்திரா
[02 – 08 – 1988]

வறுத்தலைவிளான், தெல்லிப்பளையைச் சேர்ந்த கிருபாகரசூரியன் – சரோஜினி தாரா (மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பளை) தம்பதிகளின் செல்வப் புதல்வன் "சுரேந்திரா" தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

சுரேந்திரா சகல செல்வமும் பெற்று நீடூழி சிறப்புடன் வாழ, அப்பா, அம்மா, புலோலி ஐயா, அம்மம்மா, அக்கும்மா, அன்ரிஅம்மா, மாமா, சித்திமார், அக்சாமார், அண்ணா,கோப்பாய் அப்பப்பா (ஜே.பி) அப்பம்மா, பெரியப்பா, அத்தைமார், வறுத்தலைவிளான் எஸ். எம். ரீ.லொறி மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், ஆச்சிமார் ஆகியோருடன் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை உத்தியோகத்தர்களும் வாழ்த்துகின்றார்கள்.

கே. இ. கிருபாகரசூரியன்
(C5992)

வெளி நாட்டிலும் உள்நாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

Computer Programming in Basic Language
ஆரம்பம் : 3 - 8 - 88
திங்கள், புதன், வெள்ளி வகுப்புகள்
பயிற்சிக்காலம் : 40 நாள்
கட்டணம் : ரூபா 750/-
(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்)
O/L படித்த இருபாலாரும் சேரலாம்.
கூடிய நேர செய்முறைப் பயிற்சி
AMSTRAD (MICRO COMPUTER), E G 2000 (P C), COMMODORE கம்பியூட்டரில் வழங்கப்படும்.
பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

DIPLOMA IN COMPUTER PROGRAMMING
COMPUTER PROGRAMMING AND DATA PROCESSING IN BASIC AND COBOL LANGUAGE
பயிற்சிக்காலம்: 6 மாதம்

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பதிவு செய்யவும்.

UNIKCO COMPUTER CENTRE
No: 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோர் அருகாமை)
(C 5844)

புரோட்டீன் நிறைந்த
புரோட்டீனெக்ஸ்®
பக்கெட் ஒன்றை
இன்றே வாங்குங்கள்!

Protinex®
CHOCOLATE-FLAVOURED DRINK
PROTEIN • VITAMINS • MINERALS

Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை
ரூபா 68/55
125 கிறாம்

Pfizer

ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மினி சினிமாக்கள் மீது நடவடிக்கை

சங்கத்தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ்மாவட்ட மினி சினிமா சங்கத்தின் கட்டுப்பாடுகளை மீறி இயங்கிய இரு மினி சினிமாக்கள் தீவுப்பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த மினி சினிமாக்கள் மீது யாழ்மாவட்ட மினி சினிமா சங்கம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உள்ளது.

இந்தத் தகவலை பிரஸ்தாப சங்கத் தலைவர் செ. வசீகரநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த 27 ஆம் திகதி புதன்கிழமை யாழ்மாவட்ட மினி சினிமா சங்கத் தலைவர் செ. வசீகரநாதன், செயலாளர் எஸ். குலேந்திரன், மற்றும் நிர்வாக உறுப்பினர்களான ரத்தினசிங்கம், ஜேசுராசா ஆகியோரை உள்ளடக்கிய திடீர் பரிசோதனைக் குழுவொன்று தீவுப் பகுதிகளுக்குச் சென்று மினி சினிமாக்களைப் பார்வையிட்டது.

அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கு இந்தக்குழு சென்றிருந்தது.

திடீர் பரிசோதனையின்போது மினி சினிமா சங்கக் கட்டுப்பாடுகளை மீறி இரு மினி சினிமாக்கள் இயங்கியது கண்டுபிடிக்கப்பட்டது.

ஒரு மினி சினிமா அனுமதிப்பத்திரத்தைப் பொதுமக்கள் பார்வைக்கு வைக்காததும், மற்ற மினி சினிமா அனுமதிப் பத்திரம் பெருமல் இயங்கியதும். கண்டு பிடிக்கப்பட்டது.

இதன் காரணமாக இந்த இரு மினிசினிமாக்கள் மீதும் எமது சங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க உள்ளது. இவவாறு அவர் தெரிவித்தார். (இ–9)

ஆரம்ப வகுப்பு ஆரம்பிக்கும் முடிவுக்கு ஆட்சேபம்

மானிப்பாய் ஆக- 2

மானிப்பாய் இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் அங்கு ஆரம்ப வகுப்புக்களை ஆரம்பிக்க முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஆட்சேபித்து நவாலி அட்டகிரிசைவ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தீர்மானம் எடுத்துள்ளது.

நவாலி அட்டகிரி சைவ வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்கவருடாந்தக் கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

அப்போதே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாடசாலைஅதிபர் திரு. இ. வல்லிபுரம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையின் போது பின்வருமாறு கூறினார்.

ஆரம்ப பாடசாலைகளில் தான் எதிர் காலத் தலைவர்களின் வளர்ச்சிக்கு வித்திடப்படுகின்றது. ஆரம்ப பாடசாலைகளின் குறைபாடுகள் உடனுக்குடன் கவனிக்கப்பட வேண்டும்.

கஷ்டப்பட்டகுடும்பங்களின் பிள்ளைகள் கல்வியில் முன்னேற்றம் காண ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் பாடுபட வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

★ யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள பணம் இப் பாடசாலையில் நியமிக்கப்படும் தற்காலிக ஆசிரியர்களுக்கும், பாடசாலை அபிவிருத்தி முயற்சிகளுக்கும் செலவிடப்பட வேண்டும்.

★ பாடசாலையின்தரம் உயர்த்தல்பாடசாலைகள் புனரமைப் பின் மூலம் தடைப்பட்டதை மறு பரிசீலனை செய்யுமாறு கல்வி பணிப்பாளரைக் கோருவது.

என்ற தீர்மானங்களும் நிறை வேற்றப்பட்டன. (இ-90)

நயினதீவு - நெடுந்தீவு - எழுவைதீவு - அனலைதீவு

4 தீவுகளுக்கான தபால் விநியோகம் சீராகும்

பாதுகாப்பாக எடுத்துச்செல்ல கேள்விப்பத்திரம் கோரப்பட்டுள்ளது

ஊர்காவற்றுறை ஆக 2

தற்போது தீவுப்பகுதியில் கடல்மார்க்கமாக அனலைதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, நயினதீவு ஆகிய இடங்களுக்கு அனுப்பப்படும் தபால் பொதிகள் பாதுகாப்பற்ற நிலையில் அனுப்பப்படுவதால், அதை சீர் செய்ய தபால் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

பஸ் மூலம் ஊர்காவற்றுறைக்கும் புங்குடுதீவுக்கும் எடுத்து வரப்படும் தபாற் பொதிகளை அங்கிருந்து முறையே நயினதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய இடங்களுக்கு எடுத்துச்செல்வதற்கான கேள்விப் பத்திரங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள தபாற் திணைக்கள அதிபதியின் காரியாலயத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள இப்புதிய ஏற்பாட்டினால் இந்த நான்கு தீவுகளுக்குமான தபாற் சேவைகள் ஒரளவு சீரடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (இ - 16)

ஊரடங்கிலும் உற்சவம்

காங்கேசன்துறை, ஆக 2

ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டபோதிலும் மாவிட்டபுரம் கந்தசாமி ஆலய உற்சவம் வழமைபோல் நடைபெற்றது.

கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் 10 ஆம் திருவிழாவான வியாழக்கிழமை மாலை மஞ்சத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டபோதிலும், அனுமதி பெற்று வழமைபோல் வெளி வீதி உலாவுடன் உற்சவம்நடைபெற்றது. எனினும் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. (ஒ 68)

வரணியில் புதிய முகாம்

கொடிகாமம், ஆக.2

வரணி ஆஸ்பத்திரிக்குச் சமீபமாக அமைதிப் படையினர் புதியமுகாம் ஒன்றை அமைத்தனர். முகாம் அமைந்துள்ள காணி துப்புரவு செய்யப்படுகிறது. (ந 75)

இளம் பெண் விபத்தில் பலி

யாழ்ப்பாணம், ஆக. 2

சைக்கிளில் வந்த பெண் ஒருவர் இரண்டு சில்லு உழவு இயந்திரத்தில் மோதி விபத்துக்குள்ளாகி மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை மல்லாகம் ஸ்ரேசன் வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

ஹென்றி ஜெசிந்தா பெரிஸ்ரஸ் (வயது 28) என்ற பெண்ணே இவ்வாறான மரணத்துக்கு உள்ளானவராவர்.

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ். பதில் நீதிவான் திரு. ஏ. அன்ரனி யாழ் ஆஸ்பத்திரியில் நடத்தினார்.

காலஞ்சென்றவர் மற்றொரு பெண்ணின் சைக்கிளில் இருந்து வந்த பொழுதே விபத்துக்கு இலக்கானார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ–10)

ஊரடங்கு நேரத்தில் வெளியே சென்றவருக்கு...

யாழ்ப்பாணம், ஆக 2

விறகு வாங்கவெளியே சென்றவர் இந்திய அமைதிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

ஊரடங்கு அமுலில் இருந்த சனிக்கிழமை யாழ் - மானிப்பாய் வீதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

முஸ்லிம் தெருவைச் சேர்ந்த எஸ். எம். அப்துல்காதர் [வயது 48] என்பவரே படையினரின் சூட்டுக்கு இலக்கானார்.

காலில் காயத்துடன் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட இவர் சிகிச்சையின் பின் நேற்று வீடு திரும்பினார். (ஒ-10)

மோசடி வலையில் சிக்காதீர்

ஆசிரியர் பதவிக்கு தெரிவானோருக்கு ஆணைக்குழு கடிதம்

ஆசிரியர் பதவிக்கான எழுத்துப் பரீட்சையில் தெரிவான தாங்கள் பின்னர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அதிலும் தகுதியானவர் எனக்கண்டு, நியமனப்பட்டியலில் தங்களது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது. எனவே தாங்கள் பொறுமையாக இருந்து தங்களுக்குரிய நியமனக் கடிதத்தை நாங்கள் அனுப்பும்போது பெற்றுக் கொள்ளலாம். இடையில் பல ஏமாற்றுப் பேர்வழிகள் ஆசிரியர் நியமனம் தொடர்பாக ஊழல் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக எமக்குத் தகவல் எட்டியுள்ளது. அவ்வாறான ஏமாற்றுப் பேர்வழிகளின் வலைக்குள் சிக்காமல் இருப்பதற்காகவே இக்கடிதம் உங்களுக்கு அனுப்பப்படுகின்றது.

அண்மையில் கல்வி அமைச்சில் நடைபெற்ற ஆசிரியர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு தெரிவான விண்ணப்பதாரர்களுக்கு கல்விச்சேவை ஆணைக்குழுவினால் அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆணைக்குழுவின் தலைவர் திரு.ஆரியரத்ன கையெழுத்திட்டு கடிதத்தை அனுப்பி உள்ளார்.

தகுதியானவர்களுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதில் கல்விச்சேவை ஆணைக்குழு சிரத்தையுடையதாக இருப்பதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-16)

விளையாட்டரங்கு

முழங்காவிலில் நடந்த இல்ல விளையாட்டுப்போட்டி

முழங்காவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

பாடசாலையின் முன்னாள் அதிபர் திரு. பொன். தில்லைநாதன் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

முழங்காவில் கொத்தணி அதிபர் திரு. க. சாம்பசிவம் தலைமையில் கொடியேற்று வைபவத்துடன் போட்டிகள் ஆரம்பமாகின.

இப்போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக கிளிநொச்சி மேலதிக அதிகாரியான திரு.கோ. அமிர்தலிங்கமும்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சிகல்வி அதிகாரி ஜனுப் எஸ். ஏ. ஸி. எம் இனுனு இரணைதீவு வலைப்பாடு பங்குத் தந்தை வண பிதா பி. கொன்ஸலாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டிகளில் பாரதி இல்லம் முதலாம் இடத்தையும் வள்ளுவர் இல்லம், நாவலர் இல்லம் முறையே இரண்டாம், மூன்றும் இடங்களையும் பெற்றுக் கொண்டன.

வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு பிரதம விருந்தினர் பரிசுகளை வழங்கினர்.

விளையாட்டுச் செயலாளர் திரு. க. முருகதாசன் நன்றியுரை வழங்கினர்- (இ – 5)

மட்டுவிலில் பாலர் பாடசாலை போட்டி

மட்டுவில்சோமஸ் கந்தா அறவழிப் பாலர் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள் திரு.த. குணவீரசிங்கம் தலைமையில் நடைபெற்றன.

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

மட்டுவில் கொத்தணி அதிபர் திரு. ஆசெலலையா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதிசுந்தரம் பிள்ளை வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இரண்டாம் வருட நினைவஞ்சலி

திருமதி தையல்நாயகி நடராஜா

பிறப்பு; 1932–07–21 இறப்பு: 1986–07–25

திதி: 1988–08–02

ஈராண்டுகள் சென்றனவா எம் இணையற்ற தீபம் அழிந்து. ஈராயிரம் ஆண்டுகள்தான் சென்றிடினும் எம்மிதயம் மறக்குமோ உங்களை?

வி. நடராசா கணவன், பிள்ளைகள் 'தாய் அகம்' மருமகள், பேரப்பிள்ளை. வண். வட மேற்கு ஆனைக்கோட்டை. (5417)

யாழ். இந்துவில் ஆங்கிலப் பயிற்சிபெறும் புதிய பல்கலைக்கழக மாணவர் விவரம்

யாழ்ப்பாணம், ஆக. 2

இவ்வருடத்தில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு விசேஷ ஆங்கிலப் பயிற்சி வழங்கப்படுகிறது. அதற்காக ஆறு நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆறு பயிற்சி நிலையங்களிலும் கற்பதற்கு தெரிவான மாணவர் பட்டியல் உதயனில் தொடர்ந்து வெளியிடப்படுகிறது யாழ். இந்துக் கல்லூரி பயிற்சி நிலையத்தில் ஆங்கிலம் பயில இடம் ஒதுக்கப்பட்ட மாணவர் விவரம் வருமாறு:–

பொறியியல் – I

வி. கணேஸ்வரா – தாவடி. டபிள்யூ. ஜெயகாந்த் – ஈச்சமோட்டை, ரி. கிருபராஜா –மாவடி– யாழ்ப்பாணம், எம். எச். ஜே. பவளக்கோன்– யாழ்ப்பாணம், பி. ரி. பிரேமானந்தன் – யாழ்ப்பாணம், எஸ். ராமகிருஷ்ணா–பொரல்ல, வி. சிவகரன் – சரவணை கிழக்கு ஏ. விபுலானந்தன்–வேலணை.

பௌதிக-விஞ்ஞானம்

எஸ். அருளன்–பொரல்ல, ஏ,பிருந்தா-வெள்ளவத்தை, ஜி. சந்திரகுமாரன் – கொட்டாஞ்சேனை, டி. தி வீ பன்– யாழ்ப்பாணம், ஏ.ஆர். இன்பராஜா - யாழ்ப்பாணம், கே. இதயராஜா– வேலணை கிழக்கு, எஸ். எம். குலதீபன் - நீராவியடி, எஸ். மதுமதி– யாழ்ப்பாணம், ஏ.நந்த சீலன் – செ ாக்குவில், கே. பொன்னம்பலம்– காரைநகர், கே.ராஜன்– கோண்டாவில், ரீ. ரவிசங்கர்–வண்ணார்பண்ணை, ஏ. சகுல கலாவல்லி– கொக்குவில், எஸ். செல்வகுமார் - யாழ்ப்பாணம், கே. செந்தூரன்– முருகன் - காரைநகர், எஸ். சண்முகப்பிரியா– உரும்பராய், பி. ஆர். சிவநாதன் – யாழ்ப்பாணம், எம். சிவகௌரி– யாழ்ப்பாணம், வி. சிவகுமார் - நுவரேலியா, எஸ். சுகேந்திரன் – யாழ்ப்பாணம், பி. தமிழ்வேந்தன்– யாழ்ப்பாணம், எஸ். விஜிதா–சுண்டுக்குளி.

மருத்துவம்

எஸ். சிவபாலசிங்கம்– வேலணை கிழக்கு, ஐ. தெய்வேந்திரன்–சுண்டிக்குளி, எம். ஐங்கரன்– நயினதீவு, பி. சித்ரா– கோண்டாவில், என். நகுலசிங்கரட்ணம்– கொக்குவில், ஆர்.பத்மராஜா–வேலணை–

விவசாயம்

எஸ். அஞ்சலா–கோப்பாய், எஸ். அந்தோனி ஹறோல்ட் - கரம்பன், கே. புஷ்பஜோதி – வண்ணார்பண்ணை, கே.புஷ்பலிங்கம் – காரைநகர், எஸ். ராகவன் – யாழ்ப்பாணம், எஸ். சசிகலா– சுண்டிக்குளி, என். சசிகரன்–வேலணை.

எம். ஜே. டி. தெயோபிலஸ் – யாழ்ப்பாணம்– எஸ். தேவமனோகரன்– யாழ்ப்பாணம், ஏ.தியாகராஜா–அரியாலை, எஸ். வசந்தரூபி–அரியாலை.

கலை, வர்த்தகம்

ஏ. சி. அமல்ராஜ்–மன்னார், ஏ.அன்டன்பால்– கொழும்புத்துறை, என். பாலசுந்தர் – வண்ணார்பண்ணை, ஏ. பொன்சன்– குருநகர், ஏ.ஜே.கிறிஸ்டி –செம்மடுக்குளம், ஜே. யூஜீன் குளொட்டில்டா– குருநகர், ஏ. எப். வயித்தா - சோனகத் தெரு, யாழ்ப்பாணம்.

இ. பிரான்சிஸ் பாசையூர், எஸ். தேவா - கோப்பாய், எஸ். இந்திரா தேவி – கொக்குவில், ஜே. பி. ஜேசுதாசன் – யாழ்ப்பாணம், ஏ. ஜே. சி. ஜெயந்திரன் – [illegible] – கொக்குவில், எஸ். ஜெயசீலன் – [illegible] – சீலன்–மன்னார்.

பி. ஏ. ஜோசப் ராஜா– ஊர்காவற்துறை, எஸ். கலைமகள் – நயினதீவு, கே. கமல்வாணி – நயினதீவு, ஜே. கந்தசாமி – கரம்பன் மேற்கு, கே. கணேசலிங்கம் – சரவணை கிழக்கு, எஸ் மாலதி – அனலைதீவு, எஸ். மாதவி – யாழ்ப்பாணம், என். நளாயினி – திருநெல்வேலி, ஏ. பற்றிக் பொன்கலன்–நெடுந்தீவு, எஸ். பிரேமினி–கொழும்புத்துறை, ரி. ரகு–உரும்பராய், எம். ரட்ணம் – கரம்பன் மேற்கு, எஸ். சரசுவதி – முரசுமோட்டை, ஏ. செபநேசன் – கொழும்புத்துறை, எஸ். சிவசக்தி – நீராவியடி, வை. ஸ்டீபன்– கொட்டாஞ்சேனை, ஆர். சுதமதி–நயினதீவு, ஆர்: திலகராணி– நயினதீவு, பி. வசந்தா – வேலணை கிழக்கு.

ஜி. வாசுகி– கோண்டாவில், கே. விமலேஸ்வரி– நயினதீவு, எஸ். சந்திரகுமார்– கரந்தன், நீர்வேலி, ஏ. கார்த்திகைச்செல்வம்– யாழ்ப்பாணம், கே. குணேந்திரன்– சுண்டுக்குளி, எஸ். ரதீஸ்வரி– திருநெல்வேலி, டி. பி. அப்பாத்துரை– மட்டக்களப்பு, எப். ஆர். பஸ்டியாம் பிள்ளை– கொம்பனித் தெரு, கே.ஜெயபாலன்– திருநெல்வேலி, ரி. கலைக்குமார்– மவுண்ட்லவினியா, ஆர். குமுதினி– கொக்குவில். ஆர். மைதிலி– கொழும்புத்துறை, கே. நிரஞ்சன்– வண்ணார்பண்ணை, எஸ். பிலிப்பமலர்ராசா– வட்டக்கச்சி, பி.டி.சி. பிரபாநந்– யாழ்ப்பாணம், எஸ். சதாசிவம்– நராந்தனை வடக்கு, சி.சுரேஷ் கலா– திருநெல்வேலி. ரி. உரித்திரகுமார்– வெள்ளவத்தை, [illegible] – குமார்– யோகபுரம்.

பௌதிக விஞ்ஞானம்

எஸ். அனுசுயா– கோண்டாவில், ஏ. எஸ். ஆகஸ்டீன்– யாழ்ப்பாணம், பி. டி. ஜே. சுனகராஜா– கொழும்புத்துறை, என். வி. டேவநாத்– அரியாலை, எஸ். ஈஸ்வரபாதம்– யாழ்ப்பாணம், எம். ஜே. எஸ். பேர்டினன்ட்– யாழ்ப்பாணம், ஏ. ஞானமூர்த்திகாரைநகர், என். ஞானமோகினி– அரியாலை, எஸ். ஞானசேகர்– சுண்டுக்குளி, ஏ. ரி. ஜெகதீஸ்வரன்– நெடுந்தீவு, சி. எஸ். கிருபானந்தன்– நல்லூர், லூதர் ஜெகந்நாதன்– நல்லூர், எஸ். மாலினி– வண்ணார்பண்ணை, எஸ். மாக்ஸ்வெல்– யாழ்ப்பாணம், பி. சி. மோகன்ராஜ்– கொழும்புத்துறை, என். நந்தினி– காரைநகர், என். நவரத்தினம்– சுண்டுக்குளி.

எஸ். எம். நிரஞ்சனா– நீராவியடி, எம்.எஸ் எம் பற்றிக்– யாழ்ப்பாணம், பி. எம். பி ரின் சன்– பாசையூர், எம். ராஜன்– யாழ்ப்பாணம், என். ரமணி– வண்ணார்பண்ணை, எஸ். சாகில்– சோனகதெருத்யாழ்ப்பாணம், ரி. தயானந்தன்– யாழ்ப்பாணம், டி.தெய்வேந்திரம் - சுண்டிக்குளி,

சட்டத்துறை

ஆர். தயாளினி– கொட்டாஞ்சேனை.

பொறியியல் II

வி.மதிதரன்– கொக்குவில், எச். எம். மசரீர்– சோனகவட்டாரம் யாழ்ப்பாணம், எஸ். சதீஸ் மோகன்– கொக்குவில், எஸ். யோகராஜசிங்கம்– அரியாலை.

பல் வைத்தியத்துறை

ரி. குருநாதன்– சுண்டிக்குளி, ரி. ஜே. ஜானகி– யாழ்ப்பாணம், ஏ. ஜே. சுரேந்திரகுமார்– யாழ்ப்பாணம்.

ஓர் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் உயர்திரு

கந்தையா - சிவப்பிரகாசம்

(இளைப்பாறிய உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி)

தோற்றம்: 05-03-1916 மறைவு: 02-08-1987

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் இருப்பிடமாய்
நேசத்தின் கரங்களாய்
மலரின் சுகந்தமாய்
தேனின் இனிமையாய்
இருந்து நன்னெறி காட்டி வளர்த்த
அன்புத் தெய்வமே!
எம்மை விட்டு மறைந்து விட்டாயோ?

உமது பிரிவால் துயருறும்
வரியப்புலம், மனைவி, மக்கள்
சுன்னாகம். மருமக்கள், பேரப்பிள்ளைகள்
(5568)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி மேரிலூட்ஸ் சவரிமுத்து

மலர்வு: 21 - 5 - 1904 மறைவு: 3 - 8 - 1987

அன்பும், பண்பும், இனிய வார்த்தையும், புன்னகையும் கொண்டு அனைவரது இதயங்களையும் கவர்ந்த அன்புத்தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

3-8 88 புதன்கிழமை காலை 6–15 மணிக்கு "யாழ் அடைக்கல நாயகி" ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

57. நாலாம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். (5569)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:

வகையறிந்து வல்லவை வாய்சேரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.

பொருள்:
சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர் அவைக்களத்தின் வகையினை அறிந்து, வல்லவரின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்ல மாட்டார்.

உதயன்
இன்மை – அஞ்சாமை – நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22703
(2 08-1988 த. பெ. இல. 23

குறள் வாழ்வு

'நூல் நிலையங்களில் திருக்குறளை உணர்ந்து படிக்கக்கூடிய வசதிகள் உருவாக்கப்படவேண்டும்' இவ்வாறு சிவதர்மவள்ளல் திரு. க. கனகராசா சுன்னாகத்தில் நூல் நிலைய ஆண்டு விழா வைபவம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திருக்குறள் உலகப் பொது மறை. வாழ்க்கை நெறி நூல். வாழ்வியலின் எல்லாத் துறைகளையும் ஆராய்ந்து அறியும் நூல். வையத்துள் எவ்வாறு வாழ்வாங்கு வாழ்வது என்பதைக் குறளாகத் தறித்த குறள் ஒவ்வொன்றும் எடுத்தியம்பும்.

நெறி முறையான வாழ்க்கை வாழ, ஒவ்வொருவரும் திருக்குறளை உணர்ந்து படிக்க வேண்டும். அது கூறும் வழி நின்று வாழ வேண்டும்

நம்மில் பலரும் திருக்குறளை மேலோட்டமாக, மேலெழுந்தவாரியாகத் தான் படிக்கிறார்கள். அதனை ஆய்ந்து உணர்ந்து படிப்பது குறைவு. குறள் கூறும் நெறி முறைகளைக் கடைப்பிடிப்பதும் குறைவு.

பாடசாலையில் வெறும் பாடநூலாகப் படித்தாலும் சரி, படிக்காவிட்டாலும் சரி, ஒவ்வொருவரும் திருக்குறளை ஆய்ந்து உணர்ந்து படிப்பது அவசியம். ஒவ்வொரு குறளிலும் உள்ள ஒவ்வொரு சொல்லும் தரும் கருத்தை உணர்ந்து, அதன் ஆழத்தை அறிந்து கற்க வேண்டும்

அவ்வாறு கற்பதன் மூலம் குறள் கூறும் நெறியில் வாழவேண்டும் என்ற ஓர் உந்தல், பற்று தானாகவே ஏற்படலாம்

குறள் கூறும் நெறியில் மக்கள் வாழத் தொடங்கினால் ஓர் புதிய சமுதாயம் உருவாகும் என்பதில் ஐயமில்லை. அறமும் தர்மமும் பேணும் சமுதாயம்— வீரமும், செல்வமும் மேவும் சமுதாயம் மலரும் என்பதில் சந்தேகமில்லை.

பாடசாலைகளில் படிக்கத் தவறியதை, குறளை வாழ்க்கை நூலாகக் கொள்ளும் இலக்குடன் அதனை உய்த்து உணர்ந்து கற்றத் தவறியதை ஈடு செய்வதற்கு நூல் நிலையங்கள் மூலம் செயல்முறைப்படுத்துவது நல்ல யோசனையே.

எனினும் அதனைச் சொல்வது இலகு; செய்வது கடினம். இதற்கெனத் தனியான பணி மன்றம் ஒன்று வேண்டும். நகரம் தோறும், கிராமம் தோறும் உள்ள நூல் நிலையங்களில் திருக்குறளை திருக்குறளாகவே போதிக்கக் கூடிய, புகட்டக் கூடிய அறிஞர் கூட்டம் ஒன்று தேவை.

அப்படி ஓர் அறிஞர் குழாமை முதலில் உருவாக்க முன்வின்று உழைப்பதற்கு சமூகத்தின் முத்த பிரசைகள் முன் வந்தால் திருக்குறளைப் பிரபல்யமாக்குவது இலகுவாகி விடும்.

இதில் பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற கேள்வியே எழுந்து நிற்கும்.

ஒலிம்பிக் போட்டிகள்

தென். ஆபிரிக்காவிலிருந்து பார்வையாளருக்கும் தடை!

லண்டன், ஆக. 1

தென்கொரியத் தலைநகரான சோலில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியில் தென் ஆபிரிக்காவில் இருந்து வரும் பார்வையாளர்களும் கலந்து கொள்ளக் கூடாது என்று சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தடை விதித்துள்ளது.

தென் ஆபிரிக்க ஒலிம்பிக் கமிட்டிக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

தென் ஆபிரிக்க உடற்பயிற்சி வீரர்கள் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வதற்கு 1964 இல் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தடை விதித்தது. அத்தடை இன்னும் இருந்து வருகிறது.

இப்போது முதல் தடவையாக தென் ஆபிரிக்கப் பார்வையாளர்கள் கலந்து கொள்ளவும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில், தென் ஆபிரிக்க உடற்பயிற்சி வீரர்கள் தனது நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கும், தனது நாட்டு வீரர்கள் தென் ஆபிரிக்க வீரர்கள் கலந்து கொள்ளும் நிழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்கும் கனடா அரசு தடை விதித்திருக்கிறது. (எ)

செவ்வாயில் ஆறறிவு உயிரினங்கள் வாழ்ந்ததற்கான அறிதுறிகள் உண்டு!

அமெரிக்க ரொக்கட் அனுப்பிய படங்கள்

வாஷிங்டன், ஆ., 1

அமெரிக்கா அனுப்பிய ரொக்கட்டுகள் செவ்வாய்க் கிரகத்தைப் படம் பிடித்து அனுப்பியுள்ளன.

அந்தப் படங்களில் பழங்கால அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றன.

இவை செவ்வாய்க்கிரகத்தில் உயிரினங்கள் வாழ்ந்ததற்கான அறிகுறிகள் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

பூமியில் இருந்து 14 கோடி மைல் தொலைவில் உள்ளது செவ்வாய்க்கிரகம்.

இந்த கிரகத்துக்கு 12 ஆண்டுகளுக்கு முன்பு வைக்கிங்-1, வைக்கிங்-2 என்ற ஆளில்லாத ரொக்கெட்டுகளை அமெரிக்கா அனுப்பி வைத்தது.

அந்த ரொக்கெட்டுகள் செவ்வாய்க் கிரகத்தைநெருங்கிச்சென்று அதைப் பல்வேறு கோணங்களில் படம் பிடித்து அனுப்பின.

இந்தப் படங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

'செவ்வாய்க் கிரக பயணத் திட்டம்' என்ற பெயரில் கலிபோர்ணியா மாநிலத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் பயனாக செவ்வாய் பற்றி புதிய தகவல்கள் கிடைத்துள்ளன.

'வைக்கிங்' அனுப்பிய ஒரு படத்தில் ஒரு மைல் நீளமுள்ள மனித முகம் போன்ற அழிவுச் சின்னம் காணப்படுகிறது.

இன்னொரு படத்தில் 5 முகங்கள் கொண்ட வரிசைப் படுத்தப்பட்ட பிரமிட்டுகள் தெரிகின்றன.

பழங்கால நாகரிகத்தின் அழிவுச் சின்னங்கள் போன்ற காட்சிகள் பல படங்களில் உள்ளன

செவ்வாய்க் கிரகத்தில் ஒரு காலத்தில் ஆறறிவு படைத்த உயிரினங்கள் வாழ்ந்து இருப்பதற்கான அறிகுறியே இவை என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

உலகில் மனித இனம் மட்டும் தனிமையில் இல்லை. எங்கோ ஒரு கிரகத்தில் மற்ற உயிரினங்களும் வாழ்ந்து இருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

இவற்றை உறுதிப்படுத்தமேற்கொண்டு தெளிவான ஆதாரங்கள் தேடப்படுகின்றன.

சமீபத்தில் போர்ட்ஸ்1 போர்ட்ஸ்-2 என்ற ஆளில்லாத ரொக்கெட்டுகளை சோவியத் யூனியன் செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த ரொக்கெட்டுகள் அனுப்பும் படங்களில் இருந்து புதிய தகவல்களை விஞ்ஞானிகள் எதிர்பார்க்கின்றார்கள். (எ-4)

ஏவுளி உலகில்

தமிழகத் தேர்தலிலும் தில்லுமுல்லு நடத்த சதி

காங்கிரஸ் மீது கருணாநிதி புகார்!

சென்னை, ஆக. 1

தமிழக சட்டசபைத் தேர்தலிலும், தில்லுமுல்லு நடத்த இ. காங்கிரஸ் சதி செய்கிறது என்று தி. மு. க. தலைவர் கருணாநிதி கூறினார்.

கூட்டம்

சென்னை மாவட்ட தி. மு. க. சார்பில் மயிலாப்பூர் மாங்கொல்லையில் தேர்தல் நிதியளிப்பு விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் சென்னை மாவட்டம் சார்பில் டி. ஆர். பாலு எம் பி தேர்தல் நிதி வழங்கினார். அதைக் கருணாநிதி பெற்றுக்கொண்டு பேசியதாவது:-

2½ கோடி ரூபாவை வைத்துக்கொண்டு நாம் தேர்தலைச் சந்திக்க வேண்டும்.

தேர்தல்

தேர்தல் வருமா வராதா என்பது கேள்விக்குறியாக உள்ளது. தமிழ் நாட்டிற்குப் பதவி இறக்கம் செய்யப்பட்டு உள்ள மூன்னாள் மாநிலாராட்சித் தேர்தல் நடத்த வேண்டும் என்கிறார்.

ஏன் கமிஷனரோ தனி அதிகாரியோ சிறப்பாப் பணியாற்றமில்லையா? அவர்கள் சிறப்பாகப் பணியாற்றினாலும் சுவுன் சிலர்கள், தலைவர்கள் வேண்டும் என்று மூப்பனார் நினைக்கிறார்?

அப்படி நினைப்பவர் மாநிலத்துக்குத் தேர்தல் வைக்க ஏன் வற்புறுத்தத் தயங்குகிறார்?

தில்லுமுல்லு

மதுரையில் ஒரு காங்கிரஸ் எம் பி. நாங்கள் துப்பாக்கி ஏந்தியாவது வெற்றி பெறுவோம் என்று கூறினார்.

அலஹாபாத் தொகுதியில் ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்தபோது உத்தரப்பிரதேச முதல் மந்திரி உத்தரவிட, எதிர்க்கட்சித் தொண்டர்களைக் காங்கிரஸ் வேட்பாளர் துப்பாக்கியால் சுட்டுத் தள்ளினார். இத்தகைய கொடூரம்மிக்க காங்கிரஸ் வன்முறை இயக்கமா? இல்லை, தி. மு. க. வன்முறை இயக்கமா?

அலஹாபாத் தொகுதிக்கு வந்த ஓட்டுப் பெட்டிகளில் ஓரத்தில் மர்மமான முறையில் ஓட்டுக்கேத் திணிக்க 'ஓட்டை' இருந்ததாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது தேர்தல் அதிகாரியைக் கேட்டால் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்கிறார். காங்கிரஸான் இந்தத் தில்லுமுல்லுக்கேத் தாண்டி வி பி சிங் ஜெயிப்பாரா?

துப்பாக்கி

தமிழ்நாட்டிலும் இது போன்ற தில்லுமுல்லு செய்யக் காங்கிரஸார் முனவந்துள்ளார்கள் அதற்குக் கால அவகாசம் தேடுவதற்காகத் தன் தேர்தலைத் தள்ளிப்போட்டு வருகிறார்கள்.

ஆனால் சொல்வதற்கு வெட்கம்! கொக்கு என்று நினைத்தாயா கொங்கு என்றாய? திரிபுரா என்று நினைத்தாயா தமிழ்நாட்டை? அலஹாபத் என்று நினைக்கிறாயா தமிழ்த்தை? உங்கள் திருவிளையாடல்கள் எல்லாம் தமிழ் நாட்டில் எடுபடாது. தமிழ் நாட்டு மக்களைத் துப்பாக்கியாலோ, வன்முறையாலோ மாற்றி விட முடியாது. இது நிச்சயம்.

போராட்டப் பிரியன்

தேர்தல் நடத்தக் கோரிபோராட்டம் நடத்தினோம் என்னைப் 'போராட்டப் பிரியன்' என்று வர்ணிக்கிறார்கள். நான் வெட்கப்படவில்லை மேதனைப்படவில்லை. நான் போராட்டப்பிரியன்தான். ஆனால் போஜனப்பிரியன் அல்ல.

தேர்தல் நடத்தக் கோரி இன்னும் போராட்டத்தை நான் நடத்திக் கொண்டுதான் இருப்பேன்

இவ்வாறு கருணாநிதி பேசினார்.

பெண்களும் 'பிஷப்' ஆகலாம்

பிரிட்டிஷ் பிரதமர் கூறுகிறார்

லண்டன் ஆ:-1

பெண்களை 'பிஷப்' ஆக குருப்பட்டம் தரிக்க அனுமதிப்பது கிறிஸ்தவ கோட்பாட்டுக்கு முரணானது அல்ல என்று பிரிட்டிஷ்பிரதமர்மார்க் சரட் தாட்சர் தெரிவித்திருக்கிறார்.

இதன் மத்தியில் 500க்கு அதிகமான ஆண்கள் பிஷப்புக்கள் மாநாடு லண்டனில் பிஷப்புகளாக பெண்களை நியமிக்கலாமா என்பது பற்றி ஆராய்ந்து வருகிறது

சீன டெலிவிஷனில் ஆபாசப்படம்; ஊழியருக்கு 2 வருடச் சிறை

பீகிங், ஆ 1

சீன தொலைக்காட்சியில் ஆபாசப் படத்தைக் காட்டிய ஊழியருக்கு 2 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

இப்படத்தை சீனாவின் வடபகுதியில் உள்ள ஆளுநர்களும் சைபீரியாவில் வசிப்பவர்களும் 12 நிமிடங்கள் பார்த்தனர்.

தொலைக்காட்சி நிலையத்தில் வழமையான நிழ்ச்சி ஒளிபரப்புச் செய்யப்பட்டுக் கொண்டிருந்தது. அதே நேரத்தில் நிலைய ஊழியர்கள் சிலர் பிரத்தியேகமாக அறையொன்றில் பிரஞ்சு ஆபாசப்படம் ஒன்றை தங்களுக்கிடையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

அப்போது ஒரு ஊழியர் விடியோவின் பிழையானபொத்தானை அழுத்க்கி விட்டார். அவ்வளவுதான்! ஆபாசப்படம் சீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. (எ)

சூடானில் மனித உரிமை மீறல்கள்; சர்வதேசமன்னிப்புச்சபைகண்டனம்

லண்டன், ஆக. 1

சூடானில் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்பட்டு வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

1985 இல் ஜனாதிபதியாக இருந்த நிமெய்ரி பதவி கவிழ்க்கப்பட்டதைத்தொடர்ந்து மனித உரிமை மீறல் சம்பவங்கள் பெரிய அளவில் சூடானில் இடம் பெற்று வருவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்தது.

★ அப்பாவி மக்கள் விசாரணையின்றி மரணதண்டனைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

★ சட்ட விரோதமாக எதிர்க்கட்சியினர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

★ கைதிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுகின்றனர்.

இப்படி சர்வதேச மன்னிப்புச்சபை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (எ)

குண்டு வெடிப்பு; 54 பேர் காயம்

கோப்பன்ஹேகன், ஆ 1

ஜோஹன்னர்ஸ்பர்கில் சந்தைப் பகுதியில் குண்டு ஒன்று வெடித்ததில் சம்பத்தில் 54பேர் படுகாயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)

மாதிரிக் குடிசை அமைப்பு போட்டியில் வென்றோர் காசோலை பெற்றனர்

உடுப்பிட்டித் தொகுதி மாதிரிக் குடிசை அமைப்புப் போட்டியில் பரிசு பெற்றவர்களுக்குக் காசோலைகள் வழங்கப்பட்டன.

ஸ்ரீலங்கா வீடமைப்பு அமைச்சினால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இப்போட்டி கரவெட்டி, உடுப்பிட்டி போன்ற இடங்களில் நடைபெற்றது.

கடந்தகால சூழ்நிலை காரணமாக பரிசுகள் வழங்ப்படாமல் இருந்து வந்தது.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வெற்றியீட்டிய 14 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஜயந்துரை சமீபத்தில் காசோலை வழங்கினார். (இ- 16)

பிரிட்டிஷ் பிரதமரின் ஆஸ்திரேலிய விஜயம்

சிட்னி, ஆக. 1

அவுஸ்திரேலியாவில் ஐரோப்பியர்கள் குடியேறிய 200 ஆவது ஆண்டு நிறைவுக்கொண்டாட்டங்களில் கலந்து கொள்ள பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர் நேற்று சிட்னி சென்றடைந்தார்.

சிட்னி புறப்படும் முன்னர் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி ஒன்றில் -

பிரிட்டன் ஆஸ்திரேலிய நலன்களைக் கடந்த காலங்களில் புறக்கணித்து வந்துவிட்டது. அதைச் சீர் செய்யும் நடவடிக்கைகளை நான் எடுக்கவுள்ளேன்,— என்று சொன்னார். (எ)

மந்துவிலில் அகதிகளாக வெளியேறிய குடும்பங்கள் மீண்டும் குடியமர்ந்தன

புதுக்குடியிருப்பு, ஆக 2

அண்மையில் புதுக்குடியிருப்புக்கும் முல்லைத்தீவுக்கும் இடையில் மந்துவில் என்ற இடத்தில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து மந்துவில் கிராமப் பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது 42 குடும்பங்கள் வரை அகதிகளாக வெளியேறின. பிவடு இவை தமது இருப்பிடங்களுக்குத் திருமபின.

பயணிகள் பஸ்ஸில் பயணிகளுடன் சேர்ந்து இராணுவத்தினரும் சென்றபோது மந்துவிலில் வைத்து பஸ் தாக்கப்பட்டதும் இதில் பயணிகள் மூவர் மரணமானதும் இராணுவத்தினர் சிலர் காயம் அடைந்ததும் தெரிந்தவையே.

அடுத்தநாள் இராணுவத்தினர் இப்பகுதியில் பலத்த தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சுமார் 42 குடும்பங்கள் வரையில் அகதிகளாக வெளியேறின.

இந்நிலையில் புதுக்குடியிருப்பு கிராமசேவை உத்தியோகத்தர் திரு. கனகசுந்தரசுவாமி புதுக்குடியிருப்பு பிரசைகள் குழுவினர் ஆகியோர் மேற்கொண்ட முயற்சியின் பலனாக அகதிகள் மீண்டும் தம் வீடுகளில் குடியிருப்பதற்கு இராணுவத்தினர் எழுத்து மூலமான தமது அனுமதியைக் கொடுத்தனர்.

அத்துடன் பொதுமக்கள் உள்ள பகுதிகளில் இருந்து தாக்குதல் நடவடிக்கையை இராணுவத்தினர் நடத்தமாட்டோம் என்று இராணுவத்தினர் கூறினர். (இ-126)

3 மாதத்துக்குப் போதுமான உணவை கையிருப்பில் வைக்க கடன் வசதி செய்க

நெடுந்தீவு ப. நோ. கூ. ச. கோரிக்கை

நெடுந்தீவு, ஆ 2

நெடுந்தீவு மக்களின் கஷ்டங்களைத் தவிர்க்கும் வகையில் உணவுப் பொருள்களை கையிருப்பில் வைக்க கடன் அனுமதி அளிக்குக.

யாழ்ப்பாணம் பிரதி உணவுக்கட்டுப்பாட்டு காரியிடம் நெடுந்தீவு பல. நோ. கூ. சங்கத் தலைவர் திரு நா. இராமச்சந்திரன் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நெடுந்தீவு மக்களுக்கான உணவு விநியோகம் எல்லைகளிலும் பாதிக்கப்படலாம். எனவே அரிசி, மா ஆகியவற்றை போதிய அளவு கையிருப்பில் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

உணவுப் பொருள்களைக் கையிருப்பில் வைத்திருக்கக் கூடிய தான கடன் வசதிகள் செய்து தரப்படாததால் 1985 — 1987 ஆம் ஆண்டுகளில் பிரயாண வசதிகள் சீர்குலைந்து யாழ் நகருடன் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்ட வேளைகளில் எமது மக்கள் பட்டவலியை எதிர்நோக்கநேரிட்டது.

தற்போது யாழ் மாவட்டத்தில் நிலைமை சுமுகமாக இல்லாத காரணத்தால் மூன்று மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை கையிருப்பில் வைக்க கடன் வசதிகள் செய்து தரப்படவேண்டும்.

திரு. இராமச்சந்திரன் தமது கடிதத்தில் இப்படிக் கேட்டுள்ளார்.

கடிதப் பிரதிகள் அரசாங்க அதிபர், உதவி கூ. அபிவிருத்தி ஆணையாளர், உதவி உணவுக் கட்டுப்பாட்டாளர், கணக்காளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (இ-111)

கடன் வசதி செய்க

குப்பை அகற்ற மாட்டுவண்டி

ஊர்காவற்றுறை ஆ 2

ஊர்காவற்றுறை பட்டணத்தின் எல்லைகளுள்ள வீதிகளைச் சுத்தப்படுத்துவதற்காக மாட்டு வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை காலமும் தள்ளுவண்டி ஒன்றே இதற்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. (இ-16)

வைத்தியசாலை அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்தியவர்

இடம் மாற்றம் பெற்றவர்களுக்கு பாராட்டு

பண்டத்தரிப்பு ஆ 2

இங்கு வரும் நோயாளரைக் கவனிப்பதோடு நில்லாது. வைத்தியசாலையை அபிவிருத்தி செய்வதிலும் கூடிய கவனம் செலுத்தியவர் டாக்டர் செல்வநாயகம்.

பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியாகப் பணி புரிந்து பலாலி மத்திய மருந்தகத்திற்கு மாற்றலாகிச் சென்ற டாக்டர் செல்வநாயகத்திற்கு, வைத்தியசாலை ஊழியர்களால் பிரிவுபசாரம் வழங்கிய பிரிவுபசார வைபவத்திற்கு தலைமை வகித்த டாக்டர் கணேசலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

டாக்டர் செல்வநாயகம் பேசுகையில் கடவுள் தந்த சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்தி மக்களுக்கு நாம் சேவை செய்யவேண்டும், சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் என்றார்.

மருந்து கலவையாளர் சங்கயாழ்மாவட்ட செயலாளர் திரு. என் எம். கந்தசாமி, தாதி செல்வி அல்பேட் பரிசாரகர் திரு. தியாகராசா உட்பட பலர் பாராட்டுரை வழங்கினர். (இ-120)

சீனாவுடன் 'ஒரு நாடு இரு ஆட்சி' ஹாங்காங் ஆளுநர் கருத்து

ஹாங்காங், ஆ 1

சீனாவுடன் 'ஒரு நாடு இரு ஆட்சி' ஹாங்காங் ஆளுநர் கருத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண வைபவங்களுக்கேற்ற
✶ மணிப்புரி
✶ காஞ்சிபுர ✶ பெனாரஸ்
சேலைகளைப் பெற்றுக்கொள்ள
மயூரா சென்ரர்
13 B, நவீன சந்தை, :-: யாழ்நகர்.

உதயன்

02 - 08 - 1988 செவ்வாய்க்கிழமை

✶ சேட்டிங்ஸ் ✶ சூட்டிங்ஸ்
✶ குழந்தைகளுக்கான ஆடைகள்
சகலவிதமான
✶ றெடிமேட் ஆடைகளுக்கும்
யாழ்நகரில்
மயூரா சென்ரர்
13 B, நவீனசந்தை. :-: யாழ்நகர்.

கரம்பொன் குருமடத்தில் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக.2

கரம்பொன் குருமடத்தின் கொடியேற்றம் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

நாளைய தினம் குருதாளையான் பாவா சுவாமிகளின் சமாதி தினம் அனுஷ்டிக்கப்படும். (க)

முல்லைத்தீவு பஸ் தாமதமாகச் சேர்ந்தது

புதுக்குடியிருப்பு, ஆக 2

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி மாங்குளம் வழியால் சென்ற பஸ் வழமையை விட ஐந்து மணித்தியாலங்கள் தாமதித்துப் போய்ச் சேர்ந்தது.

பிற இடங்களுக்குப் போகவேண்டியவர்கள் இரவு 6 மணியாகிவிட்டதால் முல்லைத்தீவிலேயே இரவைக்கழித்தனர்.

இது பற்றித் தெரிய வருவதாவது:-

ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு நோக்கி யாழ்ப்பாணமிருந்து மாங்குளம் ஊடாகச் சென்ற பஸ் ஒட்டுசுட்டானில் வைத்து அமைதிப்படையினரால் மறிக்கப்பட்டது.

நெடுங்கேணிப் பாதை வழியாக முல்லைத்தீவு செல்லுமாறு கூறி பஸ்சை அமைதிப்படையினர் திசைதிருப்பினர்.

அவ்வாறு திசைதிருப்பப்பட்ட பஸ்ஸில் சென்ற பிரயாணிகளுக்கு தண்ணீரூற்றுப் பகுதியில் மீண்டும் ஒரு சோதனை காத்திருந்தது.

தண்ணீரூற்றுப் பிரதேசத்தில் 2 மணித்தியாலத்திற்கு மேலாக பஸ் மறிக்கப்பட்டு பிரயாணிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சோதனைகள் ஒருவாறு முடித்து பிரயாணத்தை தொடர அனுமதிக்கப்பட்டு பஸ் முல்லைத்தீவு சென்றடைய இரவு 6 மணியாகி விட்டது.

முல்லைத்தீவுக்கு வந்து அங்கிருந்து ஏனைய பகுதிகளுக்குச் செல்லவேண்டியவர்கள் தமது பிரயாணத்தைத் தொடர முடியாது அன்று இரவுப் பொழுதை முல்லைத்தீவுப் பட்டினத்திலேயே கழிக்க வேண்டியேற்பட்டது. (ஒ-126)

சைக்கிளை திருடமுயன்ற இளைஞர்

யாழ்ப்பாணம், ஆக. 2

யாழ் ஆஸ்பத்திரி வெளிநோயாளர் பகுதியில் சைக்கிள் ஒன்றைத் திருட முயன்ற இளைஞர் ஒருவர் அங்குள்ள ஊழியர்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடைபெற்றது.

சைக்கிளைத் திருட முயன்ற இளைஞரை ஊழியர்கள் எச்சரித்து அனுப்பினர். (ஒ-10)

இலங்கை மண்ணை தொட்டு வணங்கிய கீரன்

கொழும்பு, ஆக. 2

புலவர் கீரன் கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோயிலில் நேற்று சொற்பொழிவாற்றியபோது, இலங்கை மண்ணின் பெருமையைப் பற்றியும் குறிப்பிட்டார். ஒரு கட்டத்தில் மண்ணைத் தொட்டு வணங்கினார் அவர்.

அவரின் பேச்சின் சம்பந்தப்பட்ட பகுதி இங்கே தரப்படுகிறது:-

ஓம் என்பதைப் பல முறை சொல்வதாலும் ஓம் என்கிற வடிவத்தாலும் கூடிய விநாயகப் பெருமானை வணங்குவதாலும் நினைவாற்றல், தெய்வவடிவம் கிடைக்கும் என்று சான்றோர்கள் கூறியுள்ளார்கள்.

அந்தச் சான்றோர்கள் கூறிய அந்த உபதேசம் இந்த மண்ணிலேதான் இன்றும் உயிரோடு இருக்கிறது என்பதைக் குறிப்பிடவேண்டியது என் கடமை. வேறு எந்த மண்ணுக்கும் அந்தப் பெருமை கிடையாது.

ஆகவே இந்த மண்ணை ஒரு முறை தொட்டு வணங்குகின்றேன்!

பெரிய கலாசாரத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது இந்த மண். அதனால் இந்த மண்ணை இரு கரங்களினால் தூக்கி வணங்க வேண்டியது எனது கடமை என்றார் அவர். (ஒ-எ)

புலவர் கீரன் கொழும்பில்

கொழும்பு ஆக 2

புலவர் கீரன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் அவரின் தொடர் சமயச் சொற்பொழிவு நேற்று ஆரம்பமானது-

இம் மாதம் 13 ஆம் திகதி வரை அவரின் சமயச் சொற்பொழிவுகள் சண்முகவிலாஸ் மண்டபத்தில் இடம் பெறும்

வினைதீர்த்தவிநாயகர் பெருமை என்றபொருள் பற்றி அவர் நேற்று பேசினார். 'வள்ளி திருமணம்' பற்றிய சொற்பொழிவுடன் தொடர் சொற்பொழிவு பூர்த்தியாகும்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் எம். ஏ. பட்டம் பெற்ற இவர் பிரபல சமய, இலக்கியப் பேச்சாளராவார். (ஒ-எ)

மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் விபத்தில் சிக்கி மரணம்

யாழ்ப்பாணம், ஆக.2

யாழ் மாவட்ட மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் திரு. ரசல் சாந்தகுமார் வைரசிங்க [வயது 49] விபத்தொன்றில் சிக்கி நேற்று மரணமானார்.

கடந்த 31ஆம் திகதி இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருக்கையில் கொக்குவில் பூநாரிமரத்தடியில் மேற்படி விபத்து நடைபெற்றது.

இவர் தமது ஸ்கூட்டரில் காங்கேசன்துறை நோக்கிச்சென்று கொண்டிருந்ததாகவும்— அப்பொழுது சம்பவம் நடைபெற்ற இடத்தில் மூன்று பேர் சைக்கிள்களை உருட்டிச் சென்றதாகவும்— சைக்கிளுடன் ஸ்கூட்டர் மோதியதில் விபத்து நடைபெற்று உதவி ஆணையாளர் மேலே தூக்கி வீசப்பட்டதாகவும் இவரது மரண விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

அவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ்-பதில் நீதிவான் திரு .க. சேகரன் நடத்தினார். (ஒ-10)

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதில் புதிய நடைமுறைகள்

கொழும்பில் அரச அதிபர்கள் மாநாடு

யாழ்ப்பாணம், ஆக 2

இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவர்கள், வன்செயல் காரணமாக இடம்பெயர்ந்தவர்கள், இந்தியாவில் இருந்து வந்த தமிழ் அகதிகள் ஆகியோருக்கும் நிவாரணம் வழங்குவது சம்பந்தமாகநடைமுறைப் படுத்தப்படவுள்ளபுதிய திட்டம் பற்றி ஆராய்வதற்கான அரச அதிபர்களின் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பில் இம் மாநாடு இடம்பெறவுள்ளது.

புனரமைப்பு, புனர் நிர்மாண அமைச்சர் திரு. லயனல் ஜெயதிலக்க மாநாட்டில் விளக்க வுரை நிகழ்த்தவுள்ளார்.

இம் மாநாட்டிற்கான அழைப்புகள் சகல அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ஒ - 5)

நேற்றைய வன்செயல்கள்

கொழும்பு, ஆக 2

நேற்று சிகரெட் ஏற்றிச் சென்ற வான் ஒன்று இனந்தெரியாதவர்களினால் கடத்தப்பட்டது.

பின்னர் அந்த வான் எரிந்த நிலையில் ஹபராதுவ என்னுமிடத்தில் மீட்கப்பட்டது.

புடைவைக் கைத்தொழில் பிரதி அமைச்சர் தர்மதாஸ பண்டாவீட்டை நோக்கி இனந்தெரியாதவர்கள் சுட்டனர் என்றும்பொலிஸார் திருப்பிச் சுட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

ஆஸ்பத்திரி----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதிகளில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதுகுறித்து பல நாடுகளில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். எமது வேண்டுகோளை ஏற்றுக் கொண்டு பல்லாயிரம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் எமக்குத் தந்துதவப்பட்டுள்ளன.

நாம் வைத்திய சாலைகளில் நிலவும் பற்றாக்குறை, தேவை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு விநியோகிக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

சனசமூக நிலையங்கள் போன்ற சிறிய ஸ்தாபனங்களுக்கும் நாம் மருந்து வகைகளை வழங்கவுள்ளோம்— என்று அவர் மேலும் கூறினார். (ஒ-5)

தென்னிலங்கையில் 200 பேர் வரை கைதாகினர்

கொழும்பு, ஆக. 2

தென் இலங்கை வன்செயல்கள் தொடர்பாக இருநூற்றுக்கும் அதிகமானவர்களைப் பொலீஸார் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

இமையாணன் அல்வாய் சுற்றி வளைப்பு

வடமராட்சி, ஆக 2

நேற்று இமையாணன் அல்வாய் பகுதிகள் அமைதிப் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டன. காலை 6 மணியளவில் இந்தச் சுற்றி வளைப்பு இடம்பெற்றது.

பலர் அமைதிப் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களை அமைதிப் படையினர் விடுவித்தனர். (ஒ - 160)

அளவெட்டி வடக்கு வாழ்மக்களுக்கு ஓர் நற்செய்தி

உதயன்/சஞ்சீவி பத்திரிகைகளை அளவெட்டி வடக்கில் விற்பனை செய்யப் புதிய முகவர் நியமிக்கப்பட்டுள்ளார். 02-08-1988 தொடக்கம் அதிகாலையில் உதயன்/சஞ்சீவி பிரதிகளை கீழ்க்காணும் விலாசத்தில் அவரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

திரு. S. குருநாதன்
சேணிக்கரை,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

03-08-88 புதன்கிழமையன்று
சனி, ஞாயிறு நேர அட்டவணைப்படி
89 & 90 A/L
வகுப்புக்கள் யாவும் நடைபெறும்
NEW MASTER Institute
B. M. C. Lane, 241, Navalar Road,
JAFFNA. (C 5983)

வெளிநிலைப் பல்கலைக் கழகக் கல்வி
B.A 1988 டிசம்பர்
மீட்டல் - வினாவிடை வகுப்பு
பொருளியல்:- வரதராஜன்
தமிழ்:- குழந்தை
அரசறிவியல்:- தமீம்
ஆரம்பம்: 03-08-88
புதன் — 8.00 A.M.
BECON
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C-5971)

விநாயக.....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதன் வயிற்றிலே ஓர் ஏணியைச் சாத்தி, அந்த ஏணியைப்பிடித்துமேலே ஏறி, அந்தநேரம் யானை புறப்பட்டால் ஏறியவன் என்ன ஆவான்?

அப்போது யானைமீது ஏறி அமரவேண்டும் என்றால் என்ன வழி?

யானையின் காலைப் பிடித்தால் அது கொஞ்சம் வளைந்து கொடுக்கும் அதன் மேல் நமது காலை வைத்து யானையின்மேல் ஏறி அமரலாம். அப்போது யானைக்கு என்ன இயல்பு?

தன் பாதங்களைப் பிடிக்கின்றவர் யாரோ அவர்களைத் தலைக்கு மேலாகத் தூக்கி விடுவது யானைக்கு உள்ள இயல்பு அல்லவா!

அதே போல் விநாயகப் பெருமானுடைய திருவடிகளை யார் பிடிக்கின்றார்களோ, அவர்களை வாழ்க்கையில் தலைக்கு மேலாகத் தூக்கி விடுவான் என்பதை யாம் விநாயகனுடைய யானை வடிவத்தில் இருந்து தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இப்படி நேற்று திங்கட்கிழமை கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய கோயிலில் ஆற்றிய சொற்பொழிவின் போது இந்த விளக்கத்தைச் சொன்னார் புலவர் கீரன். (ஒ-எ)

பேச்சு.....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வல் வெளியிடுவது அவசியம்.

பேச்சுவார்த்தை, யாருடன் யார் நடத்துகிறார்கள். எங்கே பேசுகிறார்கள். இவை மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படவேண்டியவை.

மக்கள் பேச்சுவார்த்தை பற்றி தெளிவான விளக்கங்களை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பின் பேச்சுவார்த்தை என்ற செய்திகள் பழையனவாகவே இருக்கும் என்று மக்கள் நினைக்க வாய்ப்புண்டு— என்று திரு. சிவஞானம் தெரிவித்தார். (அ-10)

ஊனமுற்ற----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுப்பனவு நிறுத்தப்படும் மருத்துவ உதவிப் படியைப் பெறுவதற்கு அரச மருத்துவ உத்தியோகத்தரின் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

★ வன் செயலினால் ஊனமுற்ற ஒருவருக்கு அவரது உழைப்பாற்றலில் ஏற்பட்ட இழப்பு வீத அடிப்படையில் ஒரு லட்சம் ரூபாவின் ஒருவீத மாக அமையும் நன்கொடைக் கொடுப்பனவு வழங்கப்படும்.

★ வன் செயலினால் ஊனமுற்ற ஒருவருக்கு இழப்பு ஏற்பட்ட நாளிலிருந்து அவர் பெற்ற வேதனத்தோடு ஏனைய வாழ்கைப் படிகளும் சேர்த்து 55 வயதடையும்வரை வழங்கப்படும்.

★ கடமையின்போது இறந்த ஒருவரில் தங்கி இருப்போருக்கு அவர் மரணமுற்ற திகதியில் கொடுக்கப்பட்ட முழு வேதனமும் உயிருடன் இருந்தால் காலத்தரங்களில் கிடைக்கக் கூடிய சகல சம்பளப்படி அதிகரிப்புகளுடனும், அவர் 55 வயதை எட்டக் கூடிய காலம்வரை, அவர் உயிருடன் இருந்ததாக கருதிக்கொடுக்கப்படும். (அ-5)

மருத்துவ----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யில் 3ஆம் வருட மாணவர்களுக்கான 'கிளினிக்கல்' பயிற்சியை ஆரம்பிக்கக் கூடிய நிலையிருப்பதனால் அவர்களுக்கான பயிற்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளோம்— என்று நேற்றைய கூட்டத்தில் தகவல் தெரிவிக்கப்பட்டதாக உதயனுக்குத் தெரியவந்தது. (ஒ-5)

5 பேர் கொலை என அறிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒன்றின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக அமைதிப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மரண அறிவித்தல்கள்

செல்வகௌரி சிறிரங்கநாதன்

செல்வகௌரி சிறிரங்கநாதன் காலமாகி விட்டார். இவர் காலம் சென்ற சராசேது காவலர் (அதிபர்) செல்வநாயகியின் அன்பு மகளும் சிறிரங்கநாதன் (R. V. D.B.) அவர்களின் அன்பு மனைவியும் சிறிதர்சனன் (யாழ் இந்துக்கல்லூரி) நிர்சாந்தி (உடுவில்மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமைத் தாயாரும் இராசவல்லவன் (உப அதிபர் ஸ்கந்தவரோதயா கல்லூரி சுன்னாம்) சேது விபுலானந்த (சூட்டி மாஸ்ரர் - சராசேது சேர்விஸ் சுன்னாகம்) ஆனந்தகௌரி கணானந்தன் (லண்டன்) ஜெயகௌரி ஆகியோரின் பிரிய சகோதரியும் கணானந்தன் (UK) உருக்மணிதேவி ஆகியோரின் மைத்துனியும் பைரவியின் (UK) பெரியதாயும், முகுந்தன், நளிந்திவி, போரூபன், கௌரிதரன் லலிந்திவி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் செல்லாச்சி அம்மையார் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சுன்னாகம் பொது மயானத்திற்கு தகவக் கிரிகைக்காக பிற்பகல்2-00மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
குடும்பத்தினர்
சுன்னாகம் (5428)

R. S. வைரசிங்க

R. S. வைரசிங்க (Asst. Commissioner of Motor Traffic, Kachcheri, Jaffna) 1-8-88 அன்று காலமானார்.

இவர் சுகந்தினியின் (Teacher Jaffna College) அன்புக் கணவரும், திருமதி C. R. இரத்தினசிங்கத்தின் மருமகனும் லஷ்மன் (Colombo Commercial Company) ராஜீவி (Teacher Manipay Hindu College) சுவேந்திராணி (St. Henry's College Ilavalai) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை சுகந்தஸ்தான் உடுவிலில் அவரது இல்லத்தில் 2.8.88 செவ்வாய்க்கிழமை பி. ப 3.00மணியளவில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்.-
திருமதி S. வைரசிங்க
உடுவில் (5574)

இறுதிக் கிரியை அறிவித்தல்

திரு. வயிரமுத்து தாமோதரம்பிள்ளை (கற்கண்டு)

1-8-88 ஆம் திகதி வெளியான உதயன் பத்திரிகை தகவலின்படி சுழிபுரம் வயிரமுத்து தாமோதரம்பிள்ளை (கற்கண்டு) அவர்களின் இறுதிக்கிரியைகள் 2-8-88 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பி. ப. 12.30 மணியளவில் திருவடிநிலை மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

(தகவல்)
காழுவன்,
சுழிபுரம். க. கிருஷ்ணபிள்ளை (5576)

இப்பத்திரிகை நிறுவனத்தினால் [illegible] ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள, அவர்களது அச்சகத்தில் 02-08-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Tuesday 2nd August 1988.

Digitized by Noolaham Foundation. (தமிழ் மரபு அறக்கட்டளை)
noolaham.org | aavanaham.org